பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 11 திங்கட்கிழமை (23.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:089

# விமானப்படையை முற்றாக அழிக்கும் தற்கொலைத் தாக்குதல் முயற்சி முறியடிப்பு

## வெற்றி பெற்றிருந்தால் நிர்மூலமாகியிருக்கும் என்கிறது அரசு

கொழும்பு, பெப்ரவரி 23



விடுதலைப் புலிகளின் வான் தற்கொலைத் தாக்குதல் முயற்சி வெற்றி பெற்றிருந்தால் இலங்கை அரசு தனது விமானப்படையை முற்றாக இழந்திருக்கும் என அரசின் பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல செய்தியாளர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் முயற்சி வெற்றி பெற்றிருந்தால் விமானப்படையென்றஒன்று இங்கு இருந்திருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த விமானங்கள் தமது இலக்குகளை அடைய முன்னர் சுட்டு வீழ்த்தப்பட்டமையால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் இறுதியாக (16 ஆம் பக்கம் பார்க்க)

## புறநகர் பகுதியில் நேற்று 12 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, பெப்.23

கொழும்பின் புறநகர்ப் பகுதிகளான மொறட்டுவ, பாணந்துறை, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் இரண்டு பெண்கள் உட்பட 12 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்தத் தேடுதலில் நூற்றுக்கும் அதிகமான (16 ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட சிப்பாயின் சடலம் திருமலைக்கு

திருகோணமலை, பெப். 23

விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த படைச்சிப்பாய் ஒருவர் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் உயிரிழந்தார். அவரது சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் திருகோணமலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த படைச்சிப்பாய் தலவாக்கலையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் முல்லைத்தீவில் இரத்த வெள்ளம் 48 பேர் படுகொலை; 55 பேர் காயம்!

கொழும்பு, பெப்.23

வன்னியில், முல்லைத்தீவுப் பிரதேசத்தில் நடத்தப்படும் ஷெல், பீரங்கி, விமானத்தாக்குதல்களால் இரத்த வெள்ளம் ஓடுகின்றது. அந்த வகையில் நேற்று நடத்தப்பட்ட அகோர ஷெல் தாக்குதல்களில் 48 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 55 பேர் காயமடைந்துள்ளனர் என இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து மேலும் அவற்றில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -



வன்னியில் மாத்தளன், அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம் ஆகிய (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் 2 நாள்களாக கடும் சண்டை

முல்லைத்தீவு, பெப். 23

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புக்கு மேற்குப் பகுதியிலும் அம்பலவன்பொக்கணைக்குக் கிழக்குப் பகுதியிலும் நேற்று முன்தினம் தொடக்கம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுஞ்சண்டை இடம்பெற்று வருகிறது எனப் படைத்தரப்பு நேற்றுச் செய்தி வெளியிட்டது.

இச்சமர்களில் நேற்று முன்தினம் வரை 36 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர். அவர்களின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் உள் விடயங்களில் இந்தியா தலையிடவே முடியாது

### பாரத இணை அமைச்சர் தெரிவிப்பு

புதுடில்லி, பெப். 23

இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக அதன் உள்விவகாரங்களில் தன்னால் தலையிட முடியாது என்ற கருத்தை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகார இணையமைச்சர் ஆனந்த் சர்மா இதனை புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

தனது உடனடி அயல்நாட்டின் விவகாரங்களில் இந்தியாவிற்கு எவ்வித நேரடி (16 ஆம் பக்கம் பார்க்க)

## மார்ச் 30 ஆம் திகதிக்குள் லட்சம் தமிழர்களை அழிக்க இலங்கை அரசு சதி எனக் கோஷம்

### நேற்று சென்னையில் நடைபெற்ற பேரணியில்

சென்னை, பெப்.23

பேரழிவின் விளிம்பில் நிற்கும் ஈழத் தமிழ் மக்களுக்காக இன அழித்தலுக்கெதிரான இந்தியர்கள் அமைப்பு சென்னையில் நேற்று ஞாயிறு மாலை பிரமாண்டமான பேரணியை நடத்தியது.

பேரணியின்போது பல்வேறு கோஷங்களை மக்கள் எழுப்பினர். அவற்றில் முக்கியமாக, இறுதிப்போர் என்ற பெயரில் மார்ச் 30க்குள் லட்சம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அவலமுறும் மக்களின் துயர்நீங்க - இன்று ஆலயங்களில் அமைதிப் பிரார்த்தனை தேவாலயங்களில் திருவிழிப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், பெப்.23

பேரவலங்களுக்குள்ளான மக்களின் துயர் நீங்கவும் அமைதிக்காகவும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் எனக் கேட்டும் மகாசிவராத்தி தினமான இன்றிரவு ஆலயங்களில் அமைதிப் பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளன.

அமைதிப் பிரார்த்தனைகளை ஆலயங்களில் அமைதியான முறையில் நடத்தி அல்லற்படும் மக்களின் துயர் நீங்க பிரார்த்தனைகளை மேற்கொள்வோம். - என்று இந்து அமைப்புக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மகாசிவராத்திரி தினத்தில் நாட்டின் அமைதிக்காக விழித்திருந்து பிரார்த்தனைகளை (16 ஆம் பக்கம் பார்க்க)

## 73 சதுர கி.மீற்றர் நிலப்பரப்புக்குள் விடுதலைப்புலிகளை ஒதுக்கி விட்டோம்

### இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்



கொழும்பு, பெப்.23

தமிழீழ விடுதலைப்புலிகளை 73 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் வரையறுத்தி ஒதுக்கி விட்டதாகவும் புலிகளின் ஆயுத தளபாடங்களில் 90 வீதமானவற்றையும் உட்கட்டுமான வசதிகளையும் இராணுவத்தினர் முற்றாக அழித்துள்ளதாகவும் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராணுவப் பேச்சாளர் பிரிக்கேடிய உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்.

புலிகளுக்கு எதிரான போரில் 57 ஆம் 58 ஆம் படையணிகளும் (16 ஆம் புக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபையில் எழுப்புவது குறித்து பிரிட்டனும் பிரான்ஸும் ஆராயும்

நியூயோர்க், பெப்.23

இலங்கை விவகாரத்தைப் பாதுகாப்புச் சபையில் எழுப்புவது குறித்து ஆராயப் போவதாக பிரிட்டனும் பிரான்ஸும் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் இலங்கையில் இருந்து நியூயோர்க் திரும்பிய பின்னர் பிரிட்டனும் பிரான்ஸும் இது குறித்து தீவிரமாக ஆராய்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜோன் ஹோம்ஸ் நியூயோர்க்கிற்கு திரும்பிய பின்னர் இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச்சபையில் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26
★
10
★
1928



மறைவு
06
★
03
★
2008

## திருமதி ஆறுமுகம் இரத்தினம்

திதி: சதுர்த்தசி (23.02.2009)

அன்புடனே எமை வளர்த்து அறிவூட்டி
பண்புடனே பார்புகழ எமை வளர்த்து
இன்புடன் எல்லாம் எமக்களித்து
உலகமே ஊராக ஒன்றுபட்டு வாழ வைத்து
ஏற்றமுற நாம் வாழ இன்புற்று இருந்த - நீ
உடலால் பிரிந்தாலும் உள்ளத்தால்
நாம் மறவோம்!
நெஞ்சம் உள்ளவரை நினைவிருக்கும்
எம் நெஞ்சில்.

பத்தமேனி,
அச்சுவேலி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
14
★
02
★
1947



விண்ணில்
07
★
03
★
2008

## அமரர் இரத்தினசாமி வடிவேலு
(தம்பு அண்ணா)

அன்பின் அவதாரமே ஆதரவின் சொற்பதமே
காலனவன் தண்டனையோ? காலத்தின் சோதனையோ?
மலையென்று நினைத்திருந்தோம் மண்மடியில் நீ விழுந்தாய்
இப்படியோர் நிலையெமக்கு இக்கதியில் ஏனையா?
எழுத எழுத்துமில்லை சொல்ல சொல்லுமில்லை
அப்படியோர் உத்தமரை அவனியில் அறியவில்லை
நம் குருவிக் கூட்டிற்கு கல்லெறிதான் பட்டதையா
கூடிழந்து தவிக்கின்றோம் குடையாய் நீ இருந்திடையா!

நாரந்தனை வடமேற்கு,
தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்.

(82961)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி செல்லப்பா
(பிரபல சோதிடர், கைதடி வடக்கு)



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லப்பா நேற்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் மகாலிங்கம், குகஞானசோதி (வவுனியா), கணேசலிங்கம் (வவுனியா), சிவஞானசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசோதி, சிவகுமாரி, பேரானந்தம், ஜெயலக்சுமி (கௌரி), பிறைசூடி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷா, சாந்தினி, பிரணவன், துரந்தரன், தபோதரன், சோபனா, ருத்தாயினி, கயலினி, காலஞ்சென்ற லபோதரன் மற்றும் ஜயஸ்மினி, சுகிர்தரன், சுகிர்தா, புவிதா, பூர்விகா, புகநந்தினி, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சன்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
மகன் செ.மகாலிங்கம்
(மகான்).

# முன்னோடி வகுப்புக்கள்

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தால் எதிர்வரும் 28 ஆம் திகதி மத்தியஸ்தர்களுக்கு நடத்தப்படவுள்ள பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள் இன்று மு.ப. 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத் தலைவி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்தார்.

(1-203)

## அருள் முருகன் திருமணப் பணியகம்

கௌரவ குடும்பம் 1984, விசாகம் 3, செவ்வாய் 2இல், கிரகபாவம் 43 ½, உயர்கல்வியும் அழகும் உள்ள பெண்ணுக்கு லண்டன் PR மணமகன் தேவை போதிய சீதனம் வழங்கலாம். 03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், ஆரியகுளம் வாசிகசாலை லேன், யாழ்ப்பாணம்.

## அருள் முருகன் திருமணப் பணியகம்

உள்நாடு வெளிநாடுகளில் உள்ள ஆண், பெண் பொறியலாளர்கள், வைத்தியர்கள், உள்நாடு பல்துறை அரச பதவியினர், ஆண், பெண் ஆசிரியர்கள் உட்பட மணமக்கள் தாரளம். சேவை, நேர்மை, நம்பகம், மிகக் குறைந்த சேவைக் கட்டணம் (2.5%) T.P. 222 9334

## விற்பனைக்கு

Canon Photo Copy 1215 Machine விற்பனைக்குண்டு.
தொடர்பு: **Mr.S.Pirathaap**
**114/1, Navalar Road, Jaffna.**
**T.P. 0779080360**

## நாய்க்குட்டி விற்பனை

11 மாதம் நிரம்பிய ''ஜேர்மன் செப்பேட்'' பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: பிற்பகல் 3 மணிக்கு பின்னர்
ஞான செந்தூரன், அச்சுவேலி தெற்கு.
021 226 3403

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 23.02.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ P.ரவி - சாவகச்சேரி.
★ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
★ சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.

## வலி.கிழக்கில் சங்கங்கள் பதிவு

கோப்பாய்,
பெப்.23

வடக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்களை புனரமைப்பு செய்யும் திட்டத்தின்கீழ் வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 27 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் இப்பிரதேசத்தில் இச் சங்கங்கள் பல்வேறு உள்ளூர் சிறு அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டி அவற்றை முன்னெடுப்பதில் தீவிர அக்கறை செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பிரதேச செயலகப் பிரிவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க சமாசம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(202-72)

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி முகிலன்



மயிலு வீதி, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் No.20, ALLEE DUVAL FLEURI, 93160 NOISYLE GRAND, FRANCE ஐ வசிப் பிடமாகவும் கொண்ட கந்தசாமி முகிலன் (18.02.2009) புதன் கிழமை பிரான்சில் அகால மரணமானார்.

அன்னார் கந்தசாமி- பவளமல்லி தம்பதியரின் அன்பு மகனும் இராஜபாமினி (சிந்து), தர்ஷினி (2005 கலைப் பிரிவு, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), துஷ்யந்தி (தரம்-8, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, தரம்- 9, வ/இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பிரபாகரன் (பிரபா), ஜெயக்குமார் (குமார்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபினாவின் மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74,காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 5298615.
26A, கற்குழி, வவுனியா.
தொ.பே.: 077 8480439

அன்னாரது பிரிவால்
துயருறும்:
குடும்பத்தினர்.

## தம்பையா கந்தசாமி
(இளைப்பாறிய A.C.C.D.)

துன்னாலை மேற்கு, ஞானாசாரியர் வீதியைச் சேர்ந்த தம்பையா கந்தசாமி 20.02.2009 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சிவகுமாரன், சிவபாலன், சிவசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாவதி, சாரதாமணி, சுசீலர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5 மணி முதல் இரவு 8 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (24.02.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 5 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

41, சோமானந்த வீதி,
நெதிமாலை, தெஹிவளை.
0779622853

தகவல்:
குடும்பத்தினர்
க.சிவபாலன்.

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை கோபாலகிருஷ்ணன்
(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)



கச்சேரி கிழக்கு, இல.3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கோபாலகிருஷ்ணன் 19.02.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிங்கராசா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பிறேமாவின் பாசமிகு கணவரும் சசிறேகா, பானுறேகா (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவிகள்), தினேசன் (வவுனியா மத்திய மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், யோகராசா, சின்னராசா மற்றும் சிவபாக்கியம், சண்முகராசா (வைரவர் களஞ்சியம்), ஜெயலட்சுமி, அருளானந்தம் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்), சிவசோதி, நகுலேஸ்வரி, கலாமதி ஆகியோரின் சகோதரனும் பாமா, வசந்தி, ராசதுரை, ராசகுமார், சிவகுமார், சுப்பையா, பராசக்தி, கோபாலசிங்கம், பத்மராணி, மருதவாணன், ருக்மணி ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீமோகன் (பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), வரதராசா ஆகியோரின் சகலனும் வாணி, சத்தியா, காலஞ்சென்ற சாந்தி மற்றும் செல்வி, வாசுகி, உதயன், யோகேந்திரன், செல்வேந்திரன், கஜேந்திரன், பவானி, கல்யாணி, ரஜனி ஆகியோரின் சித்தப்பாவும் மகிழினி, அனுஷியன், அஜந்தன், அஜித், கௌசல்யா, வைஷ்ணவி, ரகுராம் ஆகியோரின் பெரியப்பாவும் விஜயன், கண்ணன், சுரேஸ், சதீஸ்குமார் (யாழ்.நீதிவான் நீதிமன்றம்), கலாநிதி, வசந்தாதேவி, கங்காதேவி, கவிதா, சிவனேசன் (யாழ்.மாவட்ட நீதிமன்றம்), சிவபாலன், இந்திரவதனா, முரளி, ஜனார்த்தனி, ஜனார்த்தனன், சாயங்கன், கவிந்தன், சுயா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2009) திங்கட்கிழமை இல.3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6590

தகவல்: மனைவி,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழகத்தில் சூடு பிடிக்கும் ஈழத் தமிழர்கள் விவகாரம்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான குரல் தமிழகத்தில் எழும்போதெல்லாம் வழமையாக ஒரு கருத்து அங்குள்ள ஆட்சித் தரப்புகளால் முன்வைக்கப்படுவதுண்டு.

அது - டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி, வைகோவின் ம.தி.மு.க., திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு, நெடுமாறனின் உலகத் தமிழர் இயக்கம் என்பன போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு சொற்ப தரப்பினரே ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான எழுச்சிப் போக்கைக் காட்டுகின்றனர். இத்தரப்பினரின் அரசியல் வலு அப்படி ஒன்றும் தமிழக அரசியலின் எதிர்காலத்தை தனித்து நிர்ணயிக்கத்தக்கதல்ல. அது புறக்கணிக்கப் படக்கூடியதே. அதனால் அத்தரப்பினர் கிளப்பும் ஆரவாரங்களுக்கு ஊடகங்கள் இடம்கொடுத்து, அவற்றைப் பிரசாரப்படுத்தினாலும் கூட, அத்தரப்பினர் தமிழகத்திலும், மத்தியிலும் அரசியல் விடயங்களில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் அப்படி ஒன்றும் பெரிதுபட்டதல்ல - என்றே விளக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இப்போதும் கூட தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்காக வெளிப்படையாகக் குரல் கொடுக்கும் சக்திகள் மேற்படி கட்சிகள் தாம். இவற்றோடு தேசிய முற்போக்குத் திராவிடர் கழகத்தின் விஜயகாந்தும் மற்றும் சினிமாத்துறையினர் சிலரும் தற்போது ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவோர் அணியில் சேர்ந்துள்ளார்கள். அவ்வளவே.

தமிழகத்தின் பிரதான இரு அரசியல் கட்சிகளான ஆளும் தி.மு.கவும் அதற்கு மாற்றான அ.தி.மு.கவும் அப்படி ஒன்றும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான எழுச்சி நிலைப்பாட்டைக் கைக்கொள்ளவே இல்லை.

ஆனால், ஈழத் தமிழர்களுக்கு எதிராக இன்று தமிழகத்தில் கொப்பளிக்கும் உணர்வலைகளை முன்னைய காலம் போல் சிறிய கட்சிகளின் செயற்பாடு என்று புறம் தள்ளி - ஒதுக்கி - உதாசீனப் படுத்தி - விடவே முடியாது. அந்த அளவுக்கு அந்த உணர்வலைகள் தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் பரவி, அனைவரினதும் சிந்தனையைச் சுட்டெரிக்கும் சூடான விவகாரமாகிவிட்டது.

தமிழகத்தின் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளும் தங்களது சுய நன்மை கருதிய நிலைப்பாடு காரணமாக, ஈழத் தமிழரின் அவல நிலை குறித்துப் பாராமுகமாக நடப்பதால், தமிழகத்தின் சமூகக் கட்டமைப்புகள் சில அரசியல் கட்சி பேதத்துக்கு அப்பால் சென்று, இப்பிரச்சினையைத் தாமாகவே கையாண்டு, தங்கள் கருத்தைப் பிரதிபலித்து, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்வந்திருக்கின்றன.

தமிழகம் உட்பட்ட இந்தியா போன்ற சமூகக் கட்டமைப்பில் சட்டத்தரணிகள் என்ற தரப்பினர் முக்கிய நிலைக்களனான மட்டத்தினராவர். ஒரு சமுதாயக் கட்டமைப்பில் சட்டம் - ஒழுங்கைச் சரிவரப் பேணச்செய்து நீதியை நிலைநாட்ட வைப்பதில் இத்தரப்பினருக்குப் பிரதான பொறுப்பு உண்டு.

சட்டத்துக்கும், நீதிக்குமாக உழைக்கும் சட்டத்தரணிகளான இத்தரப்பினர் பொதுவாக சட்டம் அசட்டை செய்யப்படும்போதும் - நீதி புறமொதுக்கப்படும்போதும் - தாமாகவே கொதித்தெழுந்து அதற்காகக் குரல் கொடுப்பது வழமை. அது அவர்களின் இரத்தத்தில் ஊறிய விடயமுமாகும்.

அதையே தமிழக சட்டத்தரணிகளும் இப்போது செய்ய முயன்றிருக்கின்றார்கள்.

ஈழத் தமிழர் விவகாரத்தை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைபோலக் காட்டி, அதைப் புறமொதுக்கிவிட்டு, அங்கு ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொடூரம் எந்த வடிவில் நிகழ்ந்தாலும் அதை அனுமதித்துப் பார்த்திருப்போம் என்ற மமதையில் புதுடில்லியும், தமிழக மாநில அரசுத் தரப்பும் செயற்படும்போது - மிகக் கொடூரப் பேரவலத்துக்கு உள்ளாகியிருக்கும் ஈழத் தமிழர்களுக்காக நாமே குரல் எழுப்பி,"வழி காண்போம் எனப் பிரகடனப்படுத்தும் வகையில் தமிழக சட்டத்தரணிகள் ஒன்றுபட்டு போராடப் புறப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தச் செயற்பாடும், அவற்றை ஒட்டி அம்பலமாகும் வெளிப்பாடுகளும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழகம் கொதிக்கத் தொடங்கிவிட்டது என்பதைப் பறைசாற்றும் அம்சங்களாகும்.

இலங்கை மீது அனுமான் இட்ட தீ போல, ஈழத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழகத்தில் கிளம்பியிருக்கும் சூடு தமிழகத்தை ஓர் ஆட்டு ஆட்டுவித்து, தமிழக அரசியலை சூறாவளியாக்கி, பல அரசியல் தலைமைத்துவங்களை ரணகளப்படுத்திப் பலரை பதவிக் கதிரைகளில் இருந்து விரட்டியடிப்பதோடு, ஈழத் தமிழரின் நலனில் அக்கறையில்லாமல் விட்டேத்தியாக நடப்பவர்களையும் அரசியலில் இருந்து வீட்டுக்கு அனுப்பிவிடும் வகையில் வளர்ந்து விஸ்வரூபம் எடுத்து வருகின்றது.

ஈழத் தமிழர்களுக்காக இதுவரை தமிழகத்தில் நான்கு அப்பாவிப் பொதுமக்கள் தங்களுக்குத் தாங்களே தீ மூட்டித் தங்கள் உயிர்களை ஆகுதியாக்கியிருக்கின்றார்கள்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தமிழக சட்டத்தரணிகளின் எழுச்சியைச் சமாளித்து, அடக்குவதற்காக, தமிழக மற்றும் அருகில் புதுவை மாநில அரசுகள், தமது பிரதேசங்களில் நீதிமன்றச் செயற்பாடுகளை இன்றும் நாளையும் முற்றாக இடைநிறுத்தி விட்டிருக்கின்றன.

அதே சமயத்தில், ஈழத் தமிழர்களின் பாதுகாப்புக்காகப் போராடும் ஏனைய தமிழகத்தின் பல கட்டமைப்புகளும் இவ்விடயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, வீதிக்கு இறங்கத் தயாராகிவிட்டன.

தமிழகத்தின் பட்டி, தொட்டியெல்லாம் எட்டி, அங்கு ஒரு கலக்குக்கலக்கிவரும் இப்பிரச்சினை, தமிழகத்தில் பல அதிரடி மாற்றங்களுக்கும், புதிய பல அரசியல் நிகழ்வுகளுக்கும் வழி செய்யலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது. அவை விரைவில் கட்டவிழும் என நம்பலாம்.

# அரசின் போர் நடவடிக்கைகளை மலையகத் தமிழர் ஆதரிக்கவில்லை

**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை 22.02.2009 அன்று அதன் அரசியல் விமர்சன அரங்கில் வெளியிட்டிருந்த கட்டுரையில் இருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

பெப்ரவரி 14ஆம் திகதி நடந்த மாகாண சபைத் தேர்தலில் எதிர்பார்த்ததைப் போலவே ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டணி (யு.பி.எப்.ஏ) அபரிதமான வெற்றியை சுவீகரித்துள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் ஆளும் ஐக்கியக் கூட்டணி வெற்றி பெற்று வருவதானது இந்த சமகால அரசியல் வரலாற்றை மாற்றியமைப்பதாக உள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பிரதான கூட்டாளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது அதன் நிறுவுனரான எஸ். டபிள்யூ.ஆர் டி பண்டாரநாயக்கவின் காலத்தில் இருந்த நிலையிலிருந்து மாறிவிட்டது. 1956ஆம் ஆண்டளவில் கட்சி சரித்திர முக்கியத்துவமான வெற்றிகளை ஈட்டியபோது கிராமிய மட்டத்திலான 5 சக்திகள்-பௌத்த குருமார், தொழிலாளர்கள், ஆயுள்

## மாகாணசபைத் தேர்தல் இதைக் காட்டுவதாக உள்ளது

வேத வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள்-போன்ற தேசிய சிங்கள சக்திகள் அடிப்படையாக விளங்கின. ஆனால் பண்டார நாயக்க தமது கட்சி மத்திய தர நிலைப்பாட்டைக் கொண்ட மதசார்பற்ற கட்சியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அரை நூற்றாண்டுகள் கடந்ததன் பின்னர் கட்சி மீண்டும் தனது ஆரம்ப நிலையிலான சிங்கள வாக்காளர்களைத் தழுவி நிற்கும் தேசியவாதத்திற்கு திரும்பியுள்ளது.

1950 ஆண்டளவில் பண்டார நாயக்க பொது மனிதனுக்கான ஒரு சமூகப் புரட்சியைத் தோற்றுவித்தார். இந்தப் புதிய நூற்றாண்டில் புதியதொரு சிங்கள தேசிய அடையாளத்தை தமது கட்சிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோற்றுவித்துள்ளார். இதற்கான அங்கீகாரம் நடந்து முடிந்த மத்திய, மற்றும் வட மேல் மாகாணசபைகளின் தேர்தல்களின் போது வழங்கப்பட்டுள்ளது. சந்தேகமின்றி இதே நிலை மேல்மாகாணசபை தேர்தலின் போதும் நீடிக்கும் என எதிர்பார்க்கலாம். இதில் கவலையளிக்கும் அம்சம் என்னவெனில் இந்த இரண்டு மாகாணங்களிலிருந்தும் ஒரு சிறுபான்மை உறுப்பினராவது தெரிவு செய்யப்பட முடியாமல் போனதுதான்.

### ஐ.தே.கட்சியின் நிலைமை

அடுத்த தரப்பில், இந்த நாட்டில் சுதந்திரப் போராட்டத்தில் முன்னின்று உழைத்ததும் இலங்கைத் தேசிய காங்கிரஸின் மறு அவதாரமுமான ஐ.தே. கட்சி சிறுபான்மையினருக்கு கவர்ச்சி தரும் கட்சியாகவே இருந்து வந்துள்ளது. தேசம் முழுமையிலும் சிங்கள மக்களின் வாக்குபலத்துடன் இந்த சிறுபான்மை ஆதரவும் அதற்கு இருந்து வந்தது.

இன்று நிலைமை என்னவெனில் ஐக்கிய மக்கள் முன்னணியின் தேசிய வாதத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஐ.தே.க.கிராமிய மட்டத்தில் தனது பலத்தை வெகுவாக நழுவவிட்டுக் கொண்டு வந்து விட்டது. மத்திய மாகாணத்தில் 2004இல் 26 ஆசனங்களைக் கொண்டிருந்த அக்கட்சி மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. 422, 125 வாக்குகளைப் பெற்று 22 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது. ஆனால் 30 ஆசனங்களைக் கொண்டிருந்த ஆளும்கட்சி 36 ஆக (இரண்டு போனஸ்) அதிகரித்துக் கொண்டுள்ளது.

ஆளும் கட்சியின் மாகாண சபைத் தேர்தல் வெற்றிகளைப் பொறுத்த வரை எதிர்பார்த்ததைவிட அதிகமாகக் காணப்பட்டுள்ளது. 40 தேர்தல் பிரிவுகளில் ஆக இரண்டில் மட்டுமே அது தோல்வி கண்டுள்ளது. அவை சிறுபான்மை வாக்குகளை அதிகமாகக் கொண்டுள்ள கண்டி, நுவரெலிய மாவட்டங்களாகும்.

ஆளும் கட்சிக்கு நுவரெலியாவில் ஏற்பட்ட தோல்வியானது அதன் தோழமைக் கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்கு ஏற்பட்ட விழுக்காடாகும். இத்தோல்வியானது சௌமியமூர்த்தித் தொண்டமானின் பேரன் ஆறுமுகம் தொண்டமானின் கட்சி இத்தொகுதிகளில் மக்கள் ஆதரவை இழந்து வருகிறது என்பதையே காட்டுகிறது எனலாம்.


### தோட்டப் பகுதி மக்கள் அரசின் போரை ஆதரிக்கவில்லை

2004 ஆம் ஆண்டு இ.தொ.காவைச் சேர்ந்த வேலுசாமி ராதாகிருஷ்ணன் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டு 44, 525 வாக்குகளைப் பெற்று பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றிருந்தார். இம்முறை அவருக்கு 18, 513 வாக்குகளே கிடைத்தன. பட்டியலில் 8ஆவது இடம் கிடைத்தது. அவரை எதிர்த்து நின்ற மலையக மக்கள் முன்னணி வேட்பாளர் பழனி அழகன் சிதம்பரம் 45, 229 வாக்குகளைப் பெற்றார். இவர் ஐ.தே.க.பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

## தொண்டமான், சந்திரசேகரன் நிலைப்பாட்டுக்கு எதிர்ப்பு

2004ஆம் ஆண்டு தேர்தலில் அவருக்கு 18,387 வாக்குகளே கிடைத்திருந்தன.

கண்டி (மகநுவர) தேர்தல் தொகுதி யில் ஐ.தே.கவுக்கு 12, 146 வாக்குகளும் ஆளும் கட்சிக்கு 10, 243 வாக்குகளும் கிடைத்துள்ளன. இந்த இரண்டு தொகுதிகளிலும் குறிப்பாக தோட்டப் பகுதி வாக்காளர்கள் அரசாங்கத்தின் போர் நடவடிக்கைகளை ஆத ரிக்கவில்லை யென்று தெரிகின்றது.



இருந் தாலும் மலை யக மக்களின் இரு தலைவர்களான தொண்டமானும், பி. சந்திரசேகரனும் ராஜபக்ஷ அமைச்சரவையிலேயே அமர்ந்திருக்கிறார்கள் - இ.தொ.காவின் மூன்று வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெற்றார்கள். அதேசமயம் இந்த இரு தொகுதிகளாலும் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட எட்டு முஸ்லிம் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஜே.வி.பியும் அதிலிருந்து பிரிந்து சென்ற தேசிய சுதந்திரக் கட்சியும் மிகப்பாதிக்கப்பட்ட கட்சிகளாகும். 2004 ஆம் ஆண்டு ஆளும் கட்சியுடன் இணைந்திருந்த ஜே.வி.பி. இரண்டு மாகாண சபைகளிலும் 17 ஆசனங்களைக் கொண்டிருந்தது. இம்முறை குருணாகல் மாவட்டத்தில் ஒரு தொகுதியில் மட்டுமே இக்கட்சியால் வெற்றிபெறமுடிந்தது.

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி நுவரெலியாவில் மட்டும் ஒரு ஆசனத்தை பெற முடிந்தது. வெற்றிபெற்றவர் ஆளும் கட்சித் தலைவர்களுடன் மன்றாடி இரண்டு போனஸ் ஆசனங்களில் ஒன்றைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

### ரணிலுடன் செய்துகொண்ட உடன்பாடு

2006 ஒக்டோபரில் ஜனாதிபதி ராஜபக்ஷ - ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். ஆனால் மூன்று மாதங்கள் கூட முடிவுறாத நிலையில் ஐ.தே.க.வில் பிரிவினை ஒன்றை உருவாக்கி 17 பேரை தம்பக்கம் இழுத்துக் கொண்டார் ராஜபக்ஷ. பின்னர் கருஜயசூரிய மாத்திரம் ஐ.தே.கவுக்கு திரும்பி உதவித் தலைவரானார். ஏனையவர்கள் அரசுடனேயே இருந்து வருகிறார் கள்.

ஒரு காலத்தில் பிரதான அரசியல் கட்சியாக இருந்துவந்த ஐ.தே.க. 1994 இற்குப் பிறகு பல தோல்விகளைத் தழுவிக் கொண்டு வருகின்றது.

ஐ.தே.க.அண்மைக் காலத்தில் எதிர்கொண்ட மாகாண சபைத் தேர்தல் தோல்விகளையடுத்து அண்மையில் அக்கட்சியின் காரியக் குழுக் கூட்டத்தில் தோல்விக்கான காரணம் பற்றி ஆராயப்பட்டது.

அரசாங்கம் புலிகளுக்கெதிராக மேற்கொண்ட தாக்குதல்களால் அடுத்தடுத்து பெற்று வந்த வெற்றிகளே ஐ.தே.கட்சியின் தோல்விக்குக் காரணம் என்று காரியக் குழுவில் கருத்து முன்வைக்கப்பட்டது.

ஐ.தே.க.வின் சில உறுப்பினர்கள் உதாரணமாக ருக்மன் சேனநாயக்க மற்றும் லக்ஸ்மன் செனவிரட்ன போன்றவர்கள் அரசின் வெற்றிகள் குறித்து அரசுக்கு ஏதுவான கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார்கள். ஆனால் தலைவர் விக்கிரமசிங்க சில சமயங்களில் வெளியிட்ட கருத்துகள் பொருத்தமில்லாதவையாகவும் தவறான சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்டவையாகவும் கருதப்பட்டது. இதைவிட ஐ.தே.கவைச் சேர்ந்த லக்ஷ்மன் கிரியெல்ல அரசின் வெற்றிகளைக் கிண்டல் செய்தும் வந்துள்ளார். ஒரு சமயம் மடையர்கள் தான் யுத்தம் புரிவார்கள் என்றும் அவர் கூறியிருந்தார்.

ஐ.தே.கவிடம் தெளிவான ஒரு கோட்பாடு இருக்கவில்லையென்பதை இது காட்டுவதாக இருந்தது. மேலும் வடக்கின் தீவிரவாதம் தொடர்பாக ஆய்வுரீதியிலான ஒரு கொள்கை அவர்களிடம் இருக்கவில்லையென்று காட்டியது.

மேல்மாகாண சபைத் தேர்தல் அடுத்து வரவிருக்கும் நிலையில், ராஜபக்ஷ நிர்வாகம் ஐ.தே.க.வையும் ஜே.வி.பியையும் மேலும் மூக்குடைபடச் செய்வதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல்களில் ஐ.தே.கவும், ஜே.வி.பியும் தமது ஆளணி மற்றும் நிதி ஆதாரங்களைப் பயன் படுத்தி சீரழிந்து போகச் செய்வது அரசின் நோக்கமாக இருக்கலாம் என்று அவதானிகள் கருதுகிறார்கள்

(ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி 12 | 24.02.2009 |
| | செவ்வாய்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | காலை 06.30 வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | மு.இ. 08.16 வரை |
| சுபநேரம்: | 10.59- 12.29 |
| ராகுகாலம்: | 03.29 - 04.59 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணைத் துயின்று சிவராத்திரியை அவமாக்காது உள்ளம் கசிந்து உருகி சிவன் திருவடியை வழிபடுவோம்



*''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது யாருமறிகிலார்*
*அன்பே சிவமாவது யாரு மறிந்தபின்*
*அன்பே சிவமாயமர்ந் திருப்பாரே''*

சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மானாக விளங்குபவன் இறைவன். சிவம் என்பதற்கு மங்கலம், மகிழ்வு, முத்தி, கடவுளின் அருள்நிலை சிவத்துவம் எனப்பெயர் கொள்வர்.

ஆன்மாக்கள் பிறவித் துயரினின்று நீங்குவதற்கு துணையாயிருப்பவன். பக்தர்கள் எவ்வுருவில் இறைவனை வழிபடுகிறார்களோ அவ்வுருவுருவில் காட்சி தருபவன் இறைவன்.

*''எவ்வுருவில் யாரொருர் உள்ளுவார் உள்ளத்துள்ளே*
*அவ்வுருவாய்த் தோன்றிஅருள் கொடுப்பான்- எவ்வுருவும்*
*தானேயாய் நின்றளிப்பான்''*

எனத்திருக்கைலாய ஞான உலா கூறுகிறது. ஆயினும் சிவலிங்க உருவில் வழிபடுவதுபெருமையும் தொன்மையும் அருண்மையுமுடையது.

*''காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்*
*நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்''*

என்பது சேக்கிழார் திருவாக்கு.

அருவுருவாக விளங்கும் சிவலிங்கத்திலே இருபத்தைந்து கேவல மூர்த்த பேதங்க்ள் அடங்குமென ஆகமங்கள் கூறுகின்றன.

சிவராத்திரி வரலாறு இறைவனை ஆணவமின்றி அன்பின் நிலையில் வழிபடின் அருளைப்பெறலாமென்பதை எடுத்துக் கூறுவது.

நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மஹா சிவராத்திரி என அனுஷ்டிக்கப்படுவன. இவற்றுள்ளே மஹா சிவராத்திரி விழா முக்கியமானதாக மாசி மாத அபர பக்க சதுர்த்தசி தினத்திலே அனுஷ்டிக்கப்படும்.

பிரம்ம விஷ்ணுக்கள் மத்தியில் ஏற்பட்ட தர்க்கத்தினால் அவர்களுக்குள் ஏற்பட்ட போரைத் தீர்ப்பதற்காக, இறையுண்மையை வெளிப்படுத்துவதற்காக, மாசி மாத அபரபக்க சதுர்த்தசி திதியாகிய சிவராத்திரியன்று இறைவன் அக்கினி மலையாகத் தோன்றினார். பிரம்ம விஷ்ணுக்கள் அதனைத் தரிசித்து போரை நிறுத்தி ஜோதிஸ்வரூபமான இறைவனை தரிசித்து நின்றார்கள்.

இந்த ஜோதி மலையின் அடிமுடியைத் தேடி யார் காண்கிறீர்களோ அவரே பிரம்மம் என்ற அசரீரி வாக்கிற்கு அமைய் விஷ்ணு கரு நிறப் பன்றியுருவிலும் அடியையும், பிரம்மா வெள்ளிச் சிறகுகளையுடைய அன்ன வடிவில் முடியையும் ஆயிர வருஷகாலம் தேடியும் காணாது அக்கினி மலையாக நின்ற சிவனை வணங்கி நின்றார்கள்.

அந்த அக்கினியில் இறைவன் மறைந்து சந்திரசேகர வடிவமாகத் தோன்றி மீண்டும் அவர்களுக்கு பிரமத்துவத்தையும் விஷ்ணுத்துவத்தையும் அளித்து அருள் செய்தார்.

இவ்வரலாற்றை.

*பிரம்மனும் திருமாலும் பிரானே நானென*
*பிரமன் மால் தங்கள் பேதமையாலே*
*பரமன் அனலாய் பரந்து முன்னிற்க*
*அரனடி தேடி அரற்றுகின்றாரே*

எனத் திருமந்திரம் கூறகின்றது.

அச்ஜோதிஸ்வரூபமான மலை சுருங்கி சிவலிங்க உருவில் ஒரு கருநிற மலையாக மாறியது. அதுவே அருணாசல மலை எனப்படும் ''இலிங்கோற்பவர்'' என்ற அச் சிவ உருவை இன்றும் சிவாலயங்களில் மேற்குப் பிரகாரத்தில் விளங்குவதைக் காணலாம்.

சிவராத்திரி தினத்தில் லிங்கோற்பவ காலத்தில், சிவலிங்கப் பெருமானுக்கு விஷேட வழிபாடுகள் நடைபெறும்.

அங்குலன் என்னும் வேடன் வேட்டையின்போது இரவு நேரமானதால் புலியினால் விரட்டப்பட்ட நிலையில், வில்வ மரமொன்றில் ஏறியிருந்தான். கீழே புலி அவனைக் கொல்வதற்காக காத்து நிற்கின்றது. அவனுக்குப் பயமும், தூக்கமும் மேலிட தூக்கத்தைக் கலைப்பதற்கென மரத்தில் இருந்த வில்வ இலைகளை பறித்துக் கீழே போட்ட வண்ணமிருந்தான். பொழுது புலர்ந்தது. கீழே இறங்கிய நேரம் அவனைப் புலி அடித்துக் கொன்றது. அன்றைய இரவு சிவராத்திரி தினமாகவும், விழித்திருந்து அவன் போட்ட வில்வங்கள் மரத்தின் கீழ் தற்செயலாக அமைந்த சிவலிங்கத்தின் மீது வீழ்ந்தனாலும், அது அன்பு வழிபாடாகியது.

வேடன் சிவகதி அடைந்து மறு பிறவியில் முசுகுந்தனாக பிறந்தான் என்பது வரலாறு. ஆகவே நான் எனது என்ற போர்க் குணங்கள் நீங்கி அன்புடன் செய்கின்ற பூஜையை அரனார் ஏற்றுக் கொள்கிறார். பக்தி நெறியிலே செய்த கண்ணப்பன் பூசையை இறைவன் ஏற்றுக் கொண்டதை பெரிய புராணம் கூறுவதைக் காணலாம்.

அன்பினை முன்னிலைப்படுத்தும் சிவராத்திரியில் சிவபூஜை செய்வது முக்கியத்துவமானது.

எனவே சிவராத்திரி தினத்திலே கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப் பொருளை கண்ணுக்கினியானை பாடிக் கசிந்துள்ளமுருக வழிபடுவோமாக.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்.
கோப்பாய்.

## ------சிவராத்திரி நிகழ்வுகள்------

யாழ்ப்பாணம். பெப்.23

அராலி தெற்கு கோமாதா அறநெறிப் பாடசாலை, கோகுலம் அறநெறிப் பாடசாலை, ஆகாயக்குளம் விநாயகர் ஆலய இந்து மாமன்றம் ஆகியவை இணைந்து நடத்தும் சிவராத்திரி தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஆகாயக்குளம் விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம். பெப்.23

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும் மகா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு மன்ற முன்றிலில் அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இந்து சயம கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரனும் நாவலர் மணிமண்டப பொறுப்பாளர் க.நிஜலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரனும் தமிழ்த்துறை ஆசிரியரும் ஊரெழு கிராம அலுவலருமான வரதராஜனும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளாக சிறுவர் சோலை நிகழ்சியும், பரிசளிப்பும், ''பிட்டுக்கு மண் சுமத்தல்'', ''தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'' எனும் பக்தி நாடகமும், ''காவியம், காதல் நெஞ்சங்கள்'' எனும் சினிமா சமூக நாடகமும், நடனம் என்பன இடம் பெறும். ஜாமம் 12 மணிக்கு லிங்க பூசை நடைபெறவுள்ளது. (202-7)

* * *

யாழ்ப்பாணம். பெப்.23

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் சிவராத்திரி தினமான இன்று திங்கட்கிழமை நான்கு சாமங்களும் விசேட பூசை வழிபாடுகளும், தேவார பாராயணம் என்பனவும் இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை முதல் ஐயனார் ஆலய புனித தீர்த்தக் கரையில் பக்தர்கள் தீர்த்தமாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (202-250)

* * *

சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சிவராத்திரி தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களின் நடனம், குழு இசை, கதாப்பிரசங்கம், பேச்சு என்பன இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம். பெப்.23

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய ஆதரவுடன் நடத்தும் மகா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலயத்தில் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் கலந்து கொள்வார். ''சிறப்புச் சொற் பொழிவுகளில் ''சிவபெருமானால் ஆட் கொள்ளப்பட்ட அடியார்கள்'' எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்தியதசிதரனும் ''சிவ வழிபாட்டில் சிவராத்திரி'' எனும் தலைப்பில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ச.நவநீதனும் சொற்பொழி வாற்றுவார்கள்.

* * *

கெருடாவில்,பெப்.23

கெருடாவில் மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி தினமான இன்று இரவு நாட்டில் சாந்தியும் சமாதானமும் வேண்டி விசேட பூசை அபிஷேகங்கள் நடைபெறவுள்ளன. (202-253)

## பெண் சாரணியர் போட்டி முடிவுகள்

யாழ். மாவட்ட இலங்கைச் சாரணியர் மன்றம் நடத்திய பெண் சாரணியர்களுக்கான வாழ்த்துமடல் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

வலிகாமம் - க.கஜானி (பொன்னாலை வ.பெ.வித்தி.), கு.துவாரகா (பண்டத்தரிப்பு பெண்கள் உ.த.பாடசாலை), கு.விதுஷனா (அராலி சரஸ்வதி ம.வித்தி.)

யாழ். வலயம் - நே.தரணியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ம.கனுலர் (திருக் குடும்ப கன்னியர் மடம்), ம.மான்நேச்சல் (திருக் குடும்ப கன்னியர் மடம்)

சாரணியர்- வலிகாமம் வலயம் - ப.ஜானகி (இணுவில் மத்திய கல்லூரி) யே.பெனஸ்ரினா (பண்டத்தரப்பு மகளிர் பாடசாலை) ந.சத்தியவதனி (இணுவில் மத்திய கல்லூரி).

யாழ்.வலயம்- அ.அனறொய்சி (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), ஜெ.கஸ்தூரி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அ.அனற் லொறேணா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

சிரேஸ்ட சாரணி- வலிகாமம்-ச.கஜனி (பண்டத்தரிப்பு பெண்கள் உ.த. பாடசாலை).

யாழ்.வலயம்- கு.மேரி ஜசிந்தா (திருக் குடும்ப கன்னியர் மடம்).





நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி இந்து சமய அமைப்புகளின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் உரையாற்றுவதையும் நல்லை ஆதீனச் சிறுவர்கள் தேவாரம் இசைப்பதையும் இந்துக் குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த குருமார் வேத பாராயணம் செய்வதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை கீழுள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்; லக்ஸ்மன், நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத்தில் சகல பாடசாலைகளிலும் தோட்டப் போட்டி நடத்துவதற்கு ஏற்பாடு

## வலய, மாகாண மட்டங்களில் நடைபெறும்

கோப்பாய்,பெப்.23

வடமாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் 6-13 வரையிலான வகுப்புக்களை மையப்படுத்தி பாடசாலைகளுக்கிடையிலான தோட்டப்போட்டி நடத்தப்படவுள்ளது.

வலய மட்டம், மாகாணமட்டம் என்ற ரீதியில் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு-தரம் 06-09 வரை, சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு-தரம் 10-11 வரை, மேற்பிரிவு-தரம்12-13 வரை என பிரிவுகளாக இடம்பெறும்.

வலய மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைவரை மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் தோட்ட நிலப்பரப்பு அளவு-09 சதுர மீற்றர் ($9m^2$)கொண்டதாகவும் தோட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பயிர்கள் இலைக்கறிவகை, மரக்கறி வகை, கிழங்கு வகை, மூலிகைப் பயிர்கள் ஆகியனவாகவும் அமையும்.

சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் தோட்ட நிலப்பரப்பின் அளவு-100 சதுர மீற்றர் ($100m^2$) கொண்டதாகவும் தோட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பயிர்கள் மரக்கறி வகை, இலைக்கறி வகை, கிழங்கு வகை, அவரையினப் பயிர்கள் (செடி வகை/கொடி வகை), சுவைச் சரக்குப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள் ஆகியனவாகவும் அமையும்.

மேற்பிரிவில் தோட்ட நிலப்பரப்பின் அளவு-100 சதுர மீற்றர்($100m^2$) கொண்டதாகவும் கூட்டெருதயாரித்தல், இயற்கை துறையிலான பீடைநாசினி தயாரித்தல் மற்றும் தோட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பயிர்களாக மரக்கறி வகை, இலைக்கறி வகை, கிழங்கு வகை, அவரையினப் பயிர்கள் (செடி/கொடி), சுவைச் சரக்குப் பயிர், மூலிகைப் பயிர் ஆகியனவாகவும் அமையும்.

சிக்கன நீர்ப்பாசன வழிமுறைகள் பின்பற்றப்படல், தொங்குதாவரம், சாடித் தாவரங்கள் வளர்க்கப்படல் மற்றும் தூய்மை, இயற்கைப் பசளையிடல், உயிரினவியல் முறையில் நோய்ப் பீடைகளைக் கட்டுப்படுத்தல் ஆகிய விடயங்களும் கருத்திலெடுக்கப்பட்டு புள்ளியிடப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வலய மட்டத் தெரிவுகள் இடம் பெறுவதுடன் மாகாணமட்டத் தெரிவுகள் ஜூலை 15 ஆம் திகதி முதல் ஜூலை 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-72)

# இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.23

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தேசிய இலக்கியப் பெருவிழாவையொட்டி நல்லூர் பிரதேச செயலகத்தால் இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்று பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

கனிஷ்ட, சிரேஷ்ட, திறந்த பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் சிறுகதை, கவிதையாக்கம், கட்டுரை, பாடலாக்கம் ஆகிய போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பாடசாலை மாணவர்கள், திறந்த போட்டியாளர்கள் எனப் பலர் பங்குபற்றலாம். பங்குபற்ற விரும்புபவர்கள் அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும் எனப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202-9)

### பல்கலைக்கழக அனுமதிக்கு

# முதல் படிவத்துடன் வாக்காளர் இடாப்பின் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை

யாழ்ப்பாணம், பெப்.23

புல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்போர் முதலாவது படிவத்துடன் வதிவிடத்தை உறுதி செய்வதற்கு வாக்காளர்கள் இடாப்பின் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளே சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும். எனவே தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 2ஆவது விண்ணப்ப் படிவத்துடன் அனுப்பி வைக்கப்படும் கடிதத்தின் பிரதியை தேர்தல்கள் திணைக்களத்தில் சமர்ப்பித்து வாக்காளர் இடாப்பின் சான்றிதழ்களைச் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.தேர்தல் மாவட்ட பதியும் அலுவலரும் யாழ்.அரச அதிபரு மான கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறையே இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202)

### மாகாண மட்டத்திலான

# மென்பொருள் ஆக்கத்திறன் போட்டியில் சுதுமலை சிந்மயபாரதி மாணவி முதலிடம்



யாழ்ப்பாணம், பெப்.23

கல்வியமைச்சின் இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 'பாடசாலைக் கல்வி மென்பொருள் ஆக்கத்திறன்' போட்டியில் சுதுமலை சிந்மயபாரதி மகாவித்தியாலய மாணவி யோகநாதன் கௌதமி மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பத் திறனை வளர்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட இப்போட்டிகள் தரம் 1 முதல் 8 வரை, 9 முதல் 11 வரை, 12 முதல் 13 வரை என மூன்று பிரிவுகள்ாக நடத்தப்பட்டன.

இதில் தரம் 9 முதல் 11 வரையான பிரிவில் சுதுமலை சிந்மயபாரதி மகாவித்தியாலய மாணவியான யோகநாதன் கௌதமி மாகாண மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை- மாகாண மட்டத்தில் இதே பாடசாலையில் அதே பிரிவில் 7 ஆம். இடத்தினை மணிவண்ணன் செளமியாவும், 8ஆம் இடத்தினை அசோக்குமார் குயிலினியும் பெற்றுள்ளனர்.

இதற்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி கௌதமிக்கு 10 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும், நினைவுக் கேடயமும் வழங்கப்பட்டன.

மிகவும் பின்தங்கிய சுதுமலைக் கிராமத்தில் அமைந்துள்ள சிந்மயபாரதி வித்தியாலயம் பெரியளவிலான பௌதீக வளங்களைக் கொண்டிராதபோதும் மாணவி இத்தகைய சாதனையைப் புரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (202-9)

# அட்டகிரி, இடிகுண்டு வயல்களில் தத்திகளால் பொன்னாங்காணி பாதிப்பு

நல்லூர், பெப்.23

சண்டிலிப்பாய் விவசாய போதனாசிரியர் பிரிவில் உள்ள அட்டகிரி, இடிகுண்டு வயல்களில் செய்கை பண்ணப்பட்டு வரும் பொன்னாங்காணிப் பயிர்கள் கறுப்பு நிறத் தத்திகளால் பெருமளவில் பாதிப்படைகின்றன.

இந்நிலையில் சடுதியாகப் பெருக்கமடைந்த இத்தத்திகளை முகாமைத்துவம் செய்வதற்காக கட்டுப்பாடற்ற வகையில் பீடை நாசினிகள் விசிறப்படுவதாகவும் பயிர்களில் நச்சு நீடித்திருக்கக் கூடிய காபோயூரின் குறுணலையும் விவசாயிகள் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன், மருந்துகள் விசிறப்படும் பொன்னாங்காணிக் கீரைகளை விற்பனைக்காகச் சந்தைக்கும் கொண்டு செல்வதாகவும் அறியப்படுகின்றது. இவ்வாறான வரைமுறையற்ற பீடைநாசினிப் பாவனை சாதகமாக அமையலாம் என்பதால் விவசாயிகள் குறிப்பிட்ட பீடை நாசினி வகைகளைத் தவிர்ப்பதுடன், நுகர்வோரும் இது குறித்து எச்சரிக்கையாக இருத்தல் அவசியம் எனவும் கூறப்படுகின்றது. (202-111)




# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முறைசாராப் பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம், பெப்.23

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விச் செயற்பாடுகள் மார்ச் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இவ் வருடம் எட்டு செயற்பாடுகள் 13 பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவுள்ளன. இம்முறை முதியோர் கல்வியும் முறைசாராப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

முறைசாரக் கல்விச் செயற்பாடுகள் பின்வரும் பாடசாலைகளில் மார்ச் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிற்சிகளில் பங்குபற்றவுள்ள பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யும் பயிற்சி நெறி ஆரம்பிக்கும் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைக் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

தையல் கலை பயிற்சி நெறிகள் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், குடமியன் அ.த.க.பாடசாலை ஆகியவற்றிலும்-

கணனி திருத்தல் பயிற்சி நெறிகள் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி.ஆகியவற்றிலும் இடம்பெறும்.

எழுத்தறிவூட்டல் பயிற்சி சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம், போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், மிருசுவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றிலும்- முதியோர் கல்வி மந்துவில் றோ.க.த.க.பாடசாலையிலும், செயற்பாட்டுக் கல்வி சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயத்திலும் நடைபெறும்.

சிகை அலங்காரமும் ஒப்பனையும் மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையிலும் பெண்களுக்கான உடையமைத்தல், சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திலும் உணவு தயாரித்தல், கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலையிலும் நடத்தப்படவுள்ளன. (202-207)

# கீரிமலையில் இன்று விசேட நிகழ்வுகள்; போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப்.23

சிவராத்திரியை ஒட்டி கீரிமலையில் விசேட நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பக்தர்கள் கலந்து கொள்ள வசதியாக தெல்லிப்பழை சேந்தாங்குளம் சோதனை நிலையங்கள் ஊடாகப் பொதுமக்கள் கீரிமலைக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இரு சோதனை நிலையங்களில் இருந்தும் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் கீரிமலைக்கு நடைபெறவுள்ளன.

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரியை ஒட்டி விசேட பூசை வழிபாடுகளும் சமய நிகழ்வுகள் இன்று இரவு முழுவதிலும் நடைபெறும்.

அதிகாலை கீரிமலை தீர்த்தக் கேணியில் தீர்த்த உற்சவம் நடைபெறும். நண்பகலில் மகேஸ்வர பூசை இடம்பெறும். (அ-1)



வசாவிளான் குட்டியப்புலம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஊக்குவிப்புச் செய்கையை ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி டக்ளஸ்கே தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் செனாரி தயாரட்ண ஆகியோரும் இந்தக் குழுவுடன் சென்றனர்.

குழுவினர் விவசாயிகளுடன் கலந்துரையாடுவதையும் விவசாயச் செய்கையைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலய அதிபர்



திரு.சங்கரப்பிள்ளை சத்தியவரதன் அவர்கள்
(B.A., Dip.in Edu., Sp.Trd. (Sc)., S.L.P.S- 2 - II)

இலங்கை அதிபர் சேவை தரம் 2 -II இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பதவிகள் பெற்றுக் கல்விப் பணி சிறக்கவும் சிறப்புடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை,
நெடுந்தீவு. (82945) ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் விஜயதாஸ் ஜேனுஷன் (ஜேனு)

கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த
திரு-திருமதி விஜயதாஸ் ரஞ்சனி
தம்பதியினரின்
செல்வப் புதல்வன் ஜேனுஷன்
தனது மூன்றாவது பிறந்த நாளை
இன்று (23.02.2009) திங்கட்கிழமை தமது
இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
ஜேனுக்குட்டியை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,
அம்மம்மா, பூட்டி, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார்,
பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார்,
அத்தம்மா, அத்தப்பா, அத்தான்மார், அக்காமார்,
அண்ணாமார், மச்சாள்மார், தம்பி, தங்கை, மச்சான்
அனைவரும் நீர்வை அரசகேசரி விநாயகர் துணைகொண்டு
பல்கலையும் கற்றும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

நீர்வேலி தெற்கு. தகவல்: சே.விஜயதாஸ் (விஜி)

## PRIMA CEYLON LTD இன் PRODUCTION
## கறவைகள் தீவனம்

பிறீமா சிலோன் லிமிட்டெட்டில் தரமான கறவைகள் தீவனத்தினை இலங்கையில் வடபகுதியின்
ஓரே முகவரான S.K.ஏஜென்சியிடம் மட்டுமே மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்



CEYLON GRAIN ELEVATORS LTD. இல் தரமான கோழித்தீன் உற்பத்திகளுக்கான
யாழ். மாவட்ட முகவர்களான S.K.ஏஜென்சியில் இருந்து பெற்று
அதி உச்சப் பயனை அடையுங்கள்.



மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு எமது நிறுவனத்தின் மூலம் இலவச விநியோகம் செய்யப்படும்.

### போலிகளை வாங்கி ஏமாற வேண்டாம்


**S.K.AGENCY, 128/D,, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.No.: 021 222 6884**

## யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கத்தினால் அறிமுகம் செய்யப்படும்

இலகு முறையிலான கடன் விற்பனைத் திட்டம்







இவ் விற்பனைத் திட்டமானது அரசதிணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் ஆகியோரின் நலன்களைக் கருத்திலெடுத்து முன்தொடரப்படும் ஒரு விசேட ஏற்பாடாகும்.

2009 மார்ச் மாதம் முதல்!...

யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கத்தின் ஏதேனுமொரு கிளை நிலையமொன்றில் நீங்கள் ஒரு வாடிக்கையாளராக இருப்பின்



நீங்கள் உங்களுக்கு மாதமொன்றுக்குத் தேவையான பொருள்களை கடனடிப்படையில் வாங்க விரும்பினால்




உங்கள் பெயர் விவரங்களை எங்களது கிளை நிலையமொன்றில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

மாதாந்தம் உங்களது சம்பளத் திகதி அன்று உங்களது கொடுப்பனவுகளை நீங்கள் செலுத்தி முடிக்கலாம்.

அவ்வாறு விற்பனைப் பணத்தை செலுத்தும் சமயத்தில் நீங்கள் உங்களது கொடுப்பனவுகளைக் காசோலை மூலம்தான் செய்யப் போகிறீர்கள் ஆயின் அதனையும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

ஏந்த விதமான கட்டண அறவீடுமின்றி உங்களது காசோலைகளைப் பணமாக மாற்றி வழங்குகின்ற தேவையினையும் [illegible] செய்வோம்.



நீங்கள் எமது சேவையைப் பகிர்ந்து கொள்ள விரும்பினால் உடன் உங்களுக்கு அருகில் உள்ள எங்களது கிளை நிலையம் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள்.

எந்தவித சிரமமும் இல்லாத வகையில் உங்களுடைய தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்வோம்.

தலைவர்/ பொதுமுகாமையாளர்.
யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம்.
யாழ்ப்பாணம். 22.02.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் விலைகள் மலிந்துபோன மாயத்தால் விவசாயிகள் திண்டாட்டம்; நுகர்வோர் கொண்டாட்டம்

**அண்மைக்காலமாக மக்களின் பொருளாதார இருப்பை ஆட்டங்காண வைத்துக் கொண்டிருந்த விவசாய விளைபொருள்களின் விலைகள் சடுதியாகச் சரிந்துவிட்டன. இதனால் இவ்வளவு நாள்களும் ஈயோட்டிக் கொண்டிருந்த சந்தைகளிலெல்லாம் இப்போது வியாபாரம் களைகட்டியிருக்கிறது. ஒரேயடியாக மரக்கறி விலைகள் மலிந்துபோன மாயமென்ன என்பதுபற்றி உரியவர்கள் தமது கருத்து நிலைகளை இங்கு வெளிப்படுத்துகின்றனர்.**

இங்கு விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களுக்குரிய நியாயமான விலையைப் பெற்றுக் கொள்ளமுடியாமல் போனமைக்கு, விலை. வீழ்ச்சி ஏற்படவும் விவசாயிகளின் திட்டமிடப்படாத நடவடிக்கைகளும் ஒரு காரணமாகும். மானா வாரிப் பயிர்களைப் படிப்படியாகச் செய்கை பண்ணாது ஒரேயடியாகக் கூடுதலான நிலப்பரப்பில் உற்பத்தி செய்வதுண்டு.

வெங்காயம் இங்கே பரந்த அளவில் செய்கை பண்ணப்படுகின்றது.



விவசாயிகள் ஒரே தடவையில் அதனை உற்பத்தி செய்வதால் விற்கமுடியாமல் போவதுடன், மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்யவேண்டியுள்ளது. சிறிய அளவில் படிப்படியாக உற்பத்தி செய்வதன்மூலம் தொடர்ச்சியாக கிடைக்கக்கூடியதாகவும் கணிசமான விலையில் விற்பனை செய்யக் கூடியதாகவும் இருக்கும். வருடம் பூராவும் செய்கை பண்ணக்கூடிய பயிர்களையும் இங்கு உற்பத்தியாகக் கூடிய பயிர்வகைகளையும் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் செய்கை பண்ணும்போது விலைத் தளர்வுகள், தட்டுப்பாடுகள் ஏற்பட வாய்ப்புக்கள் இராது.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை சந்தைப்படுத்தல் விவசாயிகளுக்கு ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. உற்பத்திப் பொருள்களை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாதநிலை இருக்கிறது. கூட்டுறவு அமைப்பின் மூலம் சந்தைப்படுத்தல் குறித்து கூட்டுறவு விவசாய சந்தைப்படுத்தல் சமாசம் ஒன்று உருவாக்கத் திட்டமிடப்பட்டு, இதற்கான அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

மரக்கறி விதைகளுக்கான தட்டுப்பாடுகள் உள்ளது குறித்துக் கேட்கப்பட்டபோது மரக்கறி விதைகள் பெருமளவுக்குத் தட்டுப்பாடு என்றில்லை. சீற்கோ (விதை உற்பத்தி நிறுவனம்) நிலையத்தின் மூலம் யாழ்.மாவட்டத்திற்குத் தேவையான மரக்கறி விதைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதுடன், வெளிமாவட்டங்களின் விதைகள் தேவையை நிறைவு செய்யக் கூடியதான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகிறது. விவசாய உற்பத்தி அபிவிருத்தி தொடர்பாக யாழ். மாவட்டத்திற்கு உகந்ததான பயிர்வகைகளைத் தெரிவு செய்வதில் யாழ்.விவசாய விரிவாக்கல் திணைக்களம், திருநெல்வேலி ஆராய்ச்சி நிறுவனம், வட மாகாண ஆராய்ச்சி நிறுவனம் என்பன கூட்டு நடவடிக்கைகளை எடுக்கும்.

நெல் உற்பத்தி பொதுவாக வடக்கு மாகாணத்தில் ஒரு ஹெக்டெயருக்கு 3.5 மெற்றிக்தொன் ஆகக் கூடியதாக இருக்கிறது. குடாநாட்டில் 9357.5 ஹெக்டெயரில் உற்பத்தி செய்யப்பட்டபோதும் 969 ஹெக்டேயரில் அழிவு ஏற்பட்டிருக்கிறது. முன்னர் 360, 361 இனங்கள் வழங்கப்பட்டிருந்தது. தற்போது புதிய இனங்களாக 402, 406 போன்ற 14 இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விவசாய விரிவாக்க செயற்பாடுகள் சிறப்பான முறையில் இடம்பெற்று வருவதால் உரிய பயன் கிடைக்கும் என நம்புகிறோம். மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அதிகரித்த விளைச்சல் கிடைக்குமா என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடியதாகத் தென்மராட்சிப் பகுதியில் துண்டங்கள் போட்டு பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'சீற்கோ' நிறுவனத்தில் இளைஞர்கள் யுவதிகள் சேர்க்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்ட பணிப்பாளர் குடாநாட்டின் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினதும் அரச சார்பற்ற அமைப்புக்களது தொழிற்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

விவசாய நடவடிக்கைகளுக்கான துரித செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாகப் போதிய ஆளணி பற்றாக்குறையுள்ளது. வட மாகாணத்தில் 11 விவசாய உத்தியோகத்தர்கள் தேவை. மாவட்டத்தை ஒவ்வொரு அலகாகப் பிரித்துச் செயற்படுத்துவது விவசாய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். கடந்த 10 ஆண்டுகளாக இதற்கான நியமனம் கிடைக்கவில்லை. போதிய ஆளணி கிடைக்கும் பட்சத்தில் தீவுப் பகுதிக்கும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்தக் கூடியதான நடைமுறைகள் உருவாகவும் வாய்ப்புக்கள் உண்டு. ✱

**வேலுப்பிள்ளை கனகரத்தினம்**
**(அச்செழு மேற்கு)**

எட்டுப் பரப்பில் வெங்காயம் உற்பத்தி செய்யும் எனக்கு வேறு மரக்கறிப் பயிர்களைச் செய்வதில் சில கண்டங்கள் இருப்பதுபோல் தெரிகிறது. கத்தரி, கீரை வகைகளை ஓரளவு செய்கை பண்ணிய போதும் கத்தரி எனக்குப் பெரும் பயனைத் தரவில்லை. மாரி, கோடை இரு போகங்களிலும் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டாலும் மாரி காலத்தில் குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்கின்றேன். ஏற்றுமதியற்று விலைகள் குறைந்த இந்தச் சூழ்நிலையில் அதிகாரிகள் கூறும் விவசாயிகள்



அனைவருமே ஒரே சமயத்தில் கூடுதலாக வெங்காய உற்பத்தியில் ஈடுபடுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து உணரமுடிகிறது. இது குறித்து யோசிக்க வேண்டியுள்ளது. நாங்கள் மிகுந்த பிரயாசையுடன் உற்பத்தி செய்யும் ஒரு பொருளை 25 ரூபா வுக்குக் குறைவாகவே ஒரு கிலோ வுக்கு விலையாகப் பெறுகின்றோம். உற்பத்திச் செலவே கிலோவுக்கு கிட்டத்துட்ட 20 ரூபாவுக்கு மேலாகி விடுகிறது. புகையிலை போன்றவற்றை உற்பத்தி செய்தால் அதனை உலர்த்துவதற்கு என்னிடம் உரிய வசதிகள் இல்லை. புகையிலைச் செய்கைக்குக் கூலி, உரம் என்பன கூடுதல் செல்வாகச் செய்யவேண்டியுள்ளது. மிளகு உற்பத்தியும் குருமன் நோய்த்தாக்கத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளாகிவிட்டது. வெங்காயத்தைப் பொறுத்தவரை சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நட்டம் ஏற்பட்டாலும் லாபம் தரக்கூடிய ஒன்று. ✱

**கனகு தர்மகுலசிங்கம்**
**(புத்தூர் கிழக்கு)**


நான் மரக்கறி உற்பத்தியில் கூடிய நாட்டம் கொள்வதில்லை. எனது முக்கிய இலக்கு வெங்காயச் செய்கையே. 30 பரப்பு நிலத்தில் வெங்காய உற்பத்தி பண்ணுகின்றேன். நீங்கள் குறிப்பிடுவதுபோல் தற்சமயம் விலை வீழ்ச்சியும் அதனால் நட்டமும் ஏற்பட்டாலும்கூட மிகக் கூடுதலை முதலிட்டு வேறு தொழில்களைப் பிடிக்கக்கூடியதாக இல்லை. விவசாயம் மட்டுமே எனது தொழில். கால நிலைகளைப் பார்த்துத்தான் அறுவடை செய்வது பச்சையாக வெட்டுவது கிடையாது. விலை நிலவரங்களைப் பார்த்துத்தான் வெட்டுவதுண்டு. இப்போதைய நிலையில் ஏற்றுமதி என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தச் சூழலில் லாபம் என்பது எதிர்பார்க்க முடியாததுதான். ஏற்றுமதியாகக் கூடிய காலங்களில் கிலோ ஒன்று ரூபா 40 முதல் ரூபா 60 வரைக்கும் விற்பனை செய்ததுண்டு.



சந்தைக்கு விற்பனைக்காக என்னால் எடுத்துவரும் வெங்காயங்களை நான் தரகர் மூலம் விற்பதில்லை. குறைந்த விலை கேட்பவர்களுக்குக் கொடுக்கும் வழக்கம் இல்லை. எனக்கு விலை சரியெனக் கண்டால் மட்டுமே விற்பதுண்டு. இப்போது விலைகளில் தளர்வு ஏற்பட்டாலும் போக்குவரத்து சீராகும் பட்சத்தில் ரூபா 2 லட்சம் வரை வருமானம் பெறக்கூடியதாக எனது உற்பத்தி உள்ளது. எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு ஏற்றுமதிக் கான வாய்ப்புக் கிடைத்தால் மட்டும் தான் வெங்காய உற்பத்தியில் கூடுதல் வருமானத்தைப் பெறமுடியும். ✱

**சி.குருமராசா**
**(சூராவத்தை சுண்ணாகம்)**

30 வருடமாகத் தோட்டச் செய்கையே எனது முழு மையான தொழில் வெங் காயம் உட்பட ஏனைய மரக்கறி வகைகளும் பெரிய அளவில் செய்கின்றேன்.



வெங்காயத்தைப் பொறுத்தவரை வருடத்தில் 24 பரப்பில் 6000 கன்றுகள் வைப்பதுண்டு. மாரிகாலத்தில் மழைத்தாக்கங்களால் அழிவுகள் ஏற்படுவதுண்டு. கோடையில் எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டதில்லை. 1000 கன்றுக்குச் செலவுகள் போக 15 - 20 ஆயிரம் ரூபாவரை இலாபம் கிடைக்கும் இம்முறை ரூபா 60 முதல் 70 ஆயிரம்வரை நட்டம் ஏற்பட்டுவிட்டது. அதிகாரிகளின் கருத்தும் சரியானதுதான் எதிர்வரும் காலங்களில் தற்போதிலும் பார்க்கக் குறைந்த அளவில் படிப்படியாக வெங்காயம் மற்றும் மரக்கறிகளை உற்பத்தி செய்யலாம் என எண்ணியுள்ளேன். இம்முறை எல்லோருக்கும் நட்டம்தான். வருங்காலங்களில் இந்த இழந்த நட்டத்தை ஈடு செய்யக் கூடியதாக ஏனைய மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என நம்புகின்றேன். ✱

**பொன்னம்பலம் பிறேமகாந்தன்**
**(இணுவில் மேற்கு)**

நான் பொதுவாக எல்லா வகையான மரக்கறிவகைகளையும் கணிசமான அளவில் செய்கின்றேன். வெங்காயம் 15 பரப்பில் நடுகின்றேன். ஒரு பரப்புக்கு 300 கன்றுகள்வரை வைக்கின்றேன். வெங்காயத்தைப் பொறுத்த வரை வெளிமாவட்டங்களுக்கு ஏற்று மதி செய்யும் பட்சத்தில்தான் எந்த ஒரு விவசாயியும் உரிய பயனைப் பெற முடியும். யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் மட்டும் எனக்கு அது நட்டம்தான். கூடுதலான அளவில் எல்லா விவசாயிகளும்



ஒரேயடியாக வெங்காயம் உட்பட எந்த உற்பத்தியை மேற் கொண்டாலும் தேக்க நிலையும் விலை வீழ்ச்சியும் ஏற்படத்தான் செய்யும். என்றாலும் இந்தத் தொழிலை விட் டால் நாங்கள் வேறு தொழில்களைச் செய்யக்கூடிய நிலை இல்லை. 50 கிலோ நடுகை செய்யும் நிலத்தில் வெறும் 10 கிலோவை வைத்துவிட்டு அதற்காகப் பாடுபடமுடியாது. அதனால் குறைந்த அளவில் செய்வதென்பது சாத்தியப்படாத ஒன்று வெங்காயத்துடன் புகையிலையும் உற்பத்தி செய்கிறேன். புகையிலைக்கு இறைக்கும் போது அது வெங்காயத்திற்கும் பயன்படுகின்றது. மரக்கறிகளைப் பொறுத்தவரையிலும் அவற்றின் விலைகளும் இன்று சரிந்துவிட்டது. வெங்காயம் கிலோ ஒன்று 15 ரூபாவுக்கு வியாபாரிகள் எடுக்கிறார்கள். கொடுக்கும் வெங்காயத்தில் 10 கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு என்கிறார்கள். இதுபோன்ற சந்தை நடைமுறைக்களும் எமக்குப் பாதமாகவே உள்ளது. நாங்கள் வியர்வை சிந்தினாலும் பயன் வியாபாரிகளுக்குத்தான். இதுதான் விவசாயியின் நிலைப்பாடு. ✱

**நுகர்வோர் ஒருவர்**

'நிஷா' வந்த பின்பு எல்லா மரக்கறிகளின் விலைகளும் மலையளவுக்கு உயர்ந்து காணப்பட்டன. பச்சைமிளகாய், கத்தரிக்காய், தக்காளி போன்ற மரக்கறிகளின் விலை கிலோவுக்கு ஆயிரம் ரூபா, ஆயிரத்து ஐநூறு ரூபா வரை எகிறியிருந்தது. இதனால் எம்மைப் போன்ற பல மத்தியதர ! வர்த்தகத்தைச் சேர்ந்த பலரும் மரக்கறிகளை உணவுத் தேவைக்குப் பயன்படுத்துவதென்பது எட்டாக்கனியாகவே இருந்தது. இதேவேளை கடலுணவு வகைகளை மரக்கறிகளின் விலைகளோடு ஒப்பிடும்போது மிகக் குறைந்த விலைகளில் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதனால் மீன், நண்டு, இறால் போன்றவற்றையே கறித்தேவைக்கு அதிகளவில் பயன்படுத்தினோம்.

மரக்கறிகளின் விலை தாறுமாறாக உயர்ந்து சென்றதால், கூடுதலான சந்தைப் பெறுமதியைக் கொண்ட விவசாயப் பயிர்களை உற்பத்தி செய்வதில் எல்லா விவசாயிகளும் மும்முரமாக ஈடுபட்டனர். இவர்கள் குறுகிய காலத்தில் - அதிக விளைச்சலைப் பெறுவதற்காக - உரவகைகளையும் அதிகளவில் பாவித்தனர். இதற்கு நெற்பயிர்களுக்கென மானிய விலையில் வழங்கப்பட்ட உரவகைகளும் பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் வெள்ளம் காரணமாகப் பெரும்பாலான வயல்களில் நெற்பயிர்கள் அழிவடைந்ததால் அவற்றிற்கென வழங்கப்பட்ட உரவகைகள் தேங்கிக்கிடந்தன. அவற்றை வீணாக்க எங்கள் விவசாயிகள் விரும்புவார்களா? விவசாயப் பயிர்களுக்கு உரங்களை அள்ளிக் கொட்டிவிட்டனர். அதனால் குறுகிய காலத்தில், அதிகளவில் விளைச்சலைப் பெறமுடிந்தது. அத்துடன் விளைபொருள்களின் அளவுகளும் பெருத்துவிட்டன. உதாரணமாக வெண்டிக்காயின் அளவுக்குப் பச்சைமிளகாய்கள் சந்தையில் விற்கப்படுவதைக் காணலாம்.

இதேவேளை ஒரேயடியாக மரக்கறிகள் வந்து குவிவதால், அவற்றின் விலையும் சடுதியாகக் குறைந்துவிட்டது. முதல்நாள் 1/4 கிலோ 40 ரூபாவுக்கு விற்கப்பட்ட வெங்காயம் அடுத்த நாள் ஒரு கிலோ 30 ரூபாவுக்கு விற்கப்பட்ட இரகசியம் இதுதான். விவசாயிகளுக்கு நட்டம் ஏற்பட்டுள்ள அதேசமயம், எம்மைப் போன்ற பாவனையாளர்களுக்கு விலை குறைந்ததால் மகிழ்ச்சியும் உண்டாகியிருக்கின்றது. ✱✱✱✱✱✱✱

**சந்திப்பும் படங்களும்:**
**லக்ஸ்மன், ஒளண்யன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தின் முகம்.... நிஜத்தின் முகம்....

## ''யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்''

குடும்பம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்ததே. ஆண், பெண்ணின் இயற்கையான ஈர்ப்பு திருமணத்தில் நிறைவு பெறுகிறது என்கிறார்கள் அறிஞர்கள். இந்து மதத்தை எடுத்துக் கொண்டால் அதில் காட்டப்படும் ''அர்த்தநாரீஸ்வரர்'' வடிவம் ஆணுக்கு பெண் சமம் என்பதை உணர்த்துகின்றது. அதனால்தான் ஆணும் பெண்ணும் சரிபாதி சேர்ந்த வடிவத்தை புராண இதிகாச கதைகளில் இடம்பெற வைத்தனர். நாம் எவ்வளவு வேண்டுமானாலும் நகைக்கலாம். ஆனால் இந்த விவாகத்தின் மூலம் ஏற்படும் பிணைப்பு,பந்தம் எல்லாவற்றிற்கும் மேலானது, அலௌகிகமானது. நாம் வாழ்க்கையை நன்றே வாழ வகுக்கப்பட்ட சுலபமான முறை. ஆனால் இதற்கான விலையை பெண் மட்டும் கொடுத்தாக வேண்டும் என்றால் எப்படி? அது பெண் குலத்தையே எள்ளி நகையாடுவதுபோல் இல்லையா?

சர்வதேச மட்டத்தில் ஆண், பெண் சமத்துவம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எமது நாட்டிலும் சட்டங்களை எடுத்து நோக்கினால் இவ்வறு ஆண்,பெண் சமத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒரு நாகரிகமான சமூகத்தில் ஆண், பெண் சமத்துவம் பேணப்படவேண்டும். இது சட்ட எழுத்தளவில் மட்டுமல்லாது நடைமுறை ரீதியிலும், பார்ப்பவர்களின் கண்ணுக்கு அவ்வாறு உள்ளதென உணரக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் எமது நாட்டில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் இதனை நாம் திருமணத்தின்போது, கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாதுள்ளது. திருமணத்தில் அன்பு, பாசம், விட்டுக்கொடுப்பு போன்றவை முக்கிய அம்சங்கள் ஆகும். இங்கு பெண்களுக்கு ஒன்றையுமே விட்டுக் கொடுக்கா விட்டாலும் அவளிடமுள்ள திறமைகளுக்கும், வளங்களுக்கும் மதிப்பளித்து, தன்னிடமுள்ள திறமைகளுக்கும், வலுக்களுக்கும் எந்தளவு மதிப்புக் கொடுக்கின்றானோ அந்தளவுக்கு பெண்ணிடமுள்ளவைகளுக்கும் மதிப்பளிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

தன்னை உருவாக்க தனது பெற்றோர் எவ்வளவு தியாகங்களை செய்திருப்பார்களோ, அதேபோன்று பெண்ணைப் பெற்றவர்களும் பல தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்திருக்கிறார்கள் என்று உணர வேண்டும். தான் கல்வி கற்கும் போது எவ்வாறான எதிர்பார்க்கையுடன் கல்வி கற்றானோ அதே எதிர்பார்க்கையுடனே பெண்ணும் கல்வி கற்றிருப்பாள் என்பதை ஏ றுக் கொள்ள வேண்டும்.

திருமணத்தின்போது நியாயமான, மனிதாபிமானமுள்ள, மனச்சாட்சி உள்ள நிபந்தனைகள் அவசியம்தான். ஆனால் இவ்வாறான மனிதாபிமானமற்ற நிபந்தனைகளையும், சட்டுப்பாடுகளையும், வரையறைகளையும் முன்வைக்கத் தான் வேண்டுமா?


## விடுதலைச் சீட்டு

இவ்வாறான அநாகரிகமான விடயங்களை நாம் தொடர்ந்து ஊக்கப்படுத்தவா போகின்றோம்? சிந்தியுங்கள்..

இன்று எமது சமுதாயத்தில் எதற்கெடுத்தாலும் இனப்பாகுபாடு, இன ஒதுக்கல், இன அட்டூழியங்கள் நடைபெறுகின்றன. வேற்று இனத்தவனின் அடாவடித்தனங்களால் மனம் நொந்து போகின்றோம். ஆனால் நாங்கள் மேற்கூறிய அடாவடித்தனங்களைச் செய்யாமலா இருக்கின்றோம். நான் ஆண் என்ற ஆக்ரோஷத்துடன் எம்முடன் ஒன்றாய் பழகிய, எமது உறவுகளாகிய பெண்களை நாம் எவ்வாறு நடத்துகின்றோம் என எண்ணிப்பாருங்கள். மற்றவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டக்கூடிய தகுதியிலா நாம் இருக்கின்றோம்?

இவ்வாறு சீதனம் எனும் அரக்கனிற்கு பலியாகிய ஒரு பெண்ணின் கண்ணீர் கதையை உங்களோடு பகிர்கிறேன்.

''நீ இல்லாமல் நான் இல்லை'' என்று ஆசை மொழி பேசி பெற்றோருடன் அமைதியாய் இருந்த கீதா மனதில் புகுந்தான் அனுஷன். தனியார் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த கீதாவுடன் அன்பாகவும் ஆதரவுடனும் பழகிக் காதலிப்பதாக நடித்தான். ''அவன் இன்றி அணுவும் அசையாது'' என்ற அளவிற்கு அவளது பெற்றோரை, உற்றாரை மறக்கும் அளவிற்கு அவனை மாற்றினான்.



அவளும் அனுஷன் மீது வைத்த அளவு கடந்த காதலினால் தன்னையே மறந்தாள். அங்கு அவள் தன் எதிர்கால வாழ்வு பற்றி சிந்திக்கத் தவறி விடுகின்றாள். அவளது கல்வியறிவு, பெற்றோரின் அறிவுரை யாவருமே தூசியாகத் தென்பட்டன. சிந்தனையில் காதலனையே தன் கணவனாகவும் கருதினாள். இதனால் அவள் கருவுற்றாள். அந்நேரத்தில் தன் கர்ப்பம் பற்றி தன் உயிர் காதலனிடமும் சொன்னாள். அவனும் ஆரம்பத்தில் அதை ஏற்றுக் கொண்டாலும் நாளாக நாளாக அவளை விட்டு விலகத் தொடங்கினான். ''பழகப் பழகப் பாலும் புளிக்கும்'' என்று தெரியாமலா சொன்னார்கள் பெரியவர்கள். அனுஷனும் அவள் தொடர்பு கொள்ள முனையும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தொலை பேசியைத் துண்டித்தும், வாய்க்கு வந்த வாறு ஏசியும் வெறுப்பேற்றினான். இதனால் பீதியுடன் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினாள் கீதா. அவளுக் கென்று யாருமே இல்லாத ஓர் உணர்வு தோன்றியது. அவள் நிலை குலைந்து போனாள்.

அந்த நிலையில் அனுஷனை சந்தித்துப்பேச முடிவு செய்தாள். அவனை சந்தித்து ''ஏன் அனுஷன், என்னை பிடிக்கவில்லையா? ஏன் என்னை விட்டு விலகிப் போகிறீர்கள்? என்னைத் திருமணம் செய்யுங்களேன். நான் உங்களின் குழந்தையை அல்லவா சுமக்கிறேன் என்று அழுதாள். ஆனால் அவனோ கல் நெஞ்சக்காரனாக ''உன்னைத் திருமணம் செய்வதானால் ஐந்து இலட்சம் தந்துவிடு. இல்லையேல் என்னை விட்டுவிடு. நான் எனது அம்மா சீதனத்துடன் பார்த்து வைத்திருக்கும் பெண்ணைத் திருமணம் செய்ய முடிவு செய்துள்ளேன். அதனால் தான் உனது தொடர்பைத் துண்டித்தேன்'' என்றான்.

அவளோ எங்கட வீட்டு நிலைமை உங்களுக்குத் தெரியாதா? எங்களிட்ட ஐந்து இலட்சம் இல்லையே உங்களுக்குத் தருவதற்கு. எல்லாம் தெரிஞ்சுதானே காதலிச்சனீங்க. இப்ப என்ன நடுத்தெருவில் விட்டிட்டுப் போறன் என்று சொல்லுறீங்களே, உங்களுக்கு எப்படி மனசு வருது அனுஷன்? மனச்சாட்சியே இல்லையா உங்களுக்கு? என்று ஆவேசமாகக்கத்தினாள். ஆனால் அவனோ எதையும் பொருட்படுத்தாது ''என்னை விட்டு விடு'' என்று கூறி சர்வசாதாரணமாகச் சென்றான். அவ்விடத்திலே சிலையாக நின்றாள் கீதா சில நிமிடங்கள். இன்று ஒரு பெண்பிள்ளையையும் பெற்று அநாதரவாக பெரும் பரிதாபத்திற்குரிய நிலையில் தன் தாய், தந்தையரோடு வாழ்ந்து வருகிறாள் கீதா.

ராஜி

கடந்த வாரம் வெளிவந்த நிஜத்தின் முகம், ''சந்திக்க வரும் தனிமை'' என்னும் தலைப்பில் பிரசுரமாக வேண்டியது, தவறுதலாக வேறுதலைப்பில் பிரசுர மாகி விட்டதுஎன்பதை அறியத் தருகின்றோம்.

மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.

(சி/557013)

# துயரம் பதித்துச் சென்ற மனிதத்தின்
# 31ஆம் நாள் நினைவு
## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



எம் மனவானில்,
குளிர் வெண்நிலவே, நளிர் நகையே!
பற்றறுத்துச் சென்ற பாசக்கிளியே!
இச்சகம் விட்டு பறந்தனை எங்கு?
கூடு விட்டு குயில் பறந்ததால்
வீடு இங்கு காடு ஆனது....
பட்ட மரத்தின் தோற்றம் கூட
தோற்றுப் போகும் எம் முன்னே
மலர்ச்சியிழந்து மகிழ்ச்சியிழந்து
தளர்ச்சியுற்று வலிக்கின்றோம்....
புலர்ந்த பொழுதுகளும் புலரும் பொழுதுகளும்
இனிப் புலராத பொழுதுகள் தானே?
உம்மை எடுக்க எப்படித் துணிந்தான் கூற்றுவன்.

ஊற்றுப் புகும் அளவு கூட தூற்றும் குணமுண்டோ உம்மிடம்?
பனித்துளி போன்றது உம் குணம்....
மழைத்துளி தோற்றிடும் உம் பேச்சில்!
மின்மினிகள் ஓடிடும் உம் சிரிப்பில்!
இத்தனைக்கும் என்ன குறை கண்டான் ''ஆட்டுவாகனத்தான்''?
அதனால் தானே- உம்மை
கூட்டிச் செல்ல சிரசுள் ஏறிச் சிம்மாசனமிட்டான்?
நாற்பத்தைந்து நாள்கள் தவமிருந்தோம்- ஈற்றில்
தோற்று நிற்கின்றோம் தேற்றுவார் இன்றி
காற்று வெளியிடை வீசும் பூங்காற்றே
எங்கள் தென்றலைக் கண்ணுற்றால்
உங்கள் சொந்தங்கள் துடிப்பதைக் கூறுங்கள்.....
எங்கள் உயிருக்குச்,
சத்தங்கள் இன்றி சாமரம் வீசுங்கள்...... சாமரம் வீசுங்கள்.

24.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு எம் துன்பத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் மற்றும் ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (23.02.2009) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி: காட்டுடைப்பு வீதி, காங்கேசன்துறை.

தற்காலிக முகவரி: முதலிகோயில் வீதி, தாவடி கிழக்கு, கொக்குவில்.

மனைவி,
பிள்ளைகள்.

# அமரர் பொன்னர் தர்மலிங்கம் [ராசா]


தோந்தது: 19.01.1940

திதி: திரயோதசி

பிரிந்தது: 24.01.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிப்புலன் இழந்தோரை பேசவைக்க முடியுமா?




கேள்வி: வயது 18. ஆண். மருத்துவப் பகுதிக்கு எனது கேள்வி பொருத்தமானதா என்று தெரியவில்லை. ஆனால் உங்கள் வாசகன் நான். எனது பிரச்சினையைத் தீர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையில் எழுதுகின்றேன். கடந்த 2 வருடங்களாக நான் காதலித்து வந்த பெண் கடந்த மாதம் என்னை வேண்டாம் என்று சொல்லி வெளிநாட்டில் திருமணம் செய்ய பறந்துவிட்டாள். ஆனால் என்னாலோ அவளை அவள் காதலை மறக்க முடியவில்லை. தனிமையில் தினமும் அழுகின்றேன். படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. கடந்த இரண்டு நாட்களாக இந்த உலகில் உயிர் வாழவே விருப்பமில்லை. தற்கொலை செய்து விடுவேனோ என்று எண்ணுகின்றேன். தற்கொலை தவறு என்பது தெரிகின்றது. ஆனால், என்னை அறியாமல் ஏதாவது செய்து விடுவேனோ என்று பயமாக இருக்கின்றது. இந்த தற்கொலை எண்ணத்தைப் போக்க ஏதாவது மருந்துகள் உண்டா?

பதில் : முதலில் உங்கள் மருத்துவ பக்க கேள்விக்கு பதில். தற்கொலை எண்ணங்களை வராமல் தடுப்பதற்கு மன நோய் சம்பந்தப்பட்ட மருந்துகள் இருக்கின்றன. ஆனால் இந்த மருந்துகள் தற்கொலை எண்ணங்களைத் தடுப்பதற்காக உபயோகப்படுத்தப்படுவதில்லை. சில மனநோயாளர்களுக்கு - DEPRESSION ஏற்படும்போது அந்த மனச்சோர்வில் சில வேளைகளில் தற்கொலை எண்ணங்கள் ஏற்படலாம். அவர்களுடைய மனச்சோர்வை குணப்படுத்தும் போது இந்த எண்ணங்களும் மறைந்துவிடும். உங்களுக்கு காதல் தோல்வியால் மனச்சோர்வு ஏற்பட்டுள்ளது. அதனால் தான் தற்கொலை எண்ணங்கள் ஏற்படுகின்றன. காதல் தோல்வி மாத்திரமல்ல, வியாபாரத்தில் தோல்வி ஏற்படும்போதும் நெருக்கமான உறவினரை, நண்பனை, பெற்றோரை, சகோதரங்களை இழக்கும் போதும் மனச்சோர்வு ஏற்படலாம். தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தப்பட்ட விடயங்களைப் போல், பொதுவான விஷயங்கள் கூட மனச்சோர்வை ஏற்படுத்தி தற்கொலைக்கு தூண்டலாம். உதாரணமாக, வன்னியில் தமிழ் மக்கள் பலர் இறக்கின்ற செய்தி கேட்டு மனச்சோர்வு கொண்டு - தீக்குளித்து தற்கொலை செய்தவர்களும் இம்மாதிரியானவர்களே! மனச்சோர்வு அநேகமாகத் தற்காலிகமானது. இழப்புகள், தொலைப்புகள், பிரிதல்கள் தரும் மனச்சோர்வு இவ்வகையானதே. இவற்றை காலம் (TIME) என்ற மருந்து சுகமாக்கிவிடும். எமது தன்னம்பிக்கை தோல்வி நிலையானதல்ல என்ற எண்ணம் - விழுந்தாலும் எழுவோம் என்ற தைரியம், 'இதுபோனால் இன்னொன்று' என்ற உத்வேகம், 'இதுவே முடிவல்ல தோல்வியே வெற்றியின் முதல் படிக்கல்' போன்ற POSITIVE எண்ணங்கள் - உங்கள் மனச்சோர்வை அகற்றும். தற்கொலை எண்ணங்களைத் தடுக்கும். எனவே இழந்ததை எண்ணி வருந்தாமல் வாழ்க்கையை புதிதாக ஆரம்பியுங்கள். காதல் மட்டும் வாழ்க்கையில்லை. காதல் போனால் 'சாதல்' என்று அம்பிகாபதி - அமராவதி தொட்டு ரோமியோ - ஜுலியட் வரை சாவால் முடிந்த காதல்களை தழுவி இன்றைய சினிமாவும் தொலைக்காட்சியும் - காதல்தான் இளைஞர்களுக்கு உயிர்நாடி அதுபோயின் வாழ்வே இல்லை என்ற தோரணையில் உபதேசிக்கின்றபடியால் தான் உம்மைப்போன்ற இளைஞர்கள் - தற்கொலைக்குத் தயாராகின்றார்கள் என்பதை மனதில் நிறுத்துங்கள். இறுதியாக சமீபத்தில் சஞ்சிகை ஒன்றில் வந்த சிறுகுறிப்பை உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு பொருத்தமாயிருக்கும் என்ற எண்ணத்தில் கீழே தருகின்றேன் -

''உன்னையே நீ விரும்பாத போது எதற்கு உன்னை ஒருத்தி விரும்பணும்? தன்னை விரும்பும் யாரும் தன் உயிருக்கு கேடு விளைவிக்க முடியாது! தன்னை விரும்புகிற யாரும், மற்றவர்கள் பார்வைக்கு விருப்பமானவர்களாக இருப்பார்கள். அப்படி இருக்கிறபோது, அவர்கள் மேல்வருகின்ற காதலும், அன்பும் விலகாததாக இருக்கும். முதலில் நீ உன்னை விரும்பு. உன்னையும் ஒருத்தி விரும்புவாள்!''


இலவச மருத்துவ ஆலோசனை நேரங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


***

கேள்வி: வயது 32. எனது தாயாருக்கும் தந்தையாருக்கும் நீரிழிவு நோயிருந்தது. தந்தையாருக்கு நீரிழிவு நோயின் காரணமாக - கால்கள் சத்திர சிகிச்சை செய்யப்பட்டு முடமாக இருந்து இறந்தார். சமீபத்தில் எனக்கும் நீரிழிவு நோய் ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டது. எனது தந்தையாரைப்போல் கால்களை இழக்க ஏற்படுமோ என்று ஒரே பயமாக இருக்கின்றது. எனது கால்களைப் பாதுகாக்க வழிகளுண்டா?

பதில்: நீரிழிவு நோய் பரம்பரையாக வரக்கூடியது. அதுவும் பெற்றோர் இருவருக்கும் நோயிருந்தால் நூற்றுக்கு 70 சதவீதம் குழந்தைகளுக்கும் வரலாம் என்பது புள்ளிவிவரப்படி அறியக் கூடியதாக உள்ளது. நீரிழிவு நோய்க்கு - நோய்களின் இராணி -QUEEN OF THE DISEASES என்றொரு பெயரும் உண்டு. காரணம் நீரிழிவு நோய் உடலில் - மூளை, கண்கள், இருதயம், சிறுநீரகம், நரம்புகள் என்று பல பகுதிகளைப் பாதிக்கின்றது. இந்த உறுப்புகளில் ஏற்படும் நோய்கள் பலவற்றுக்குக் காரணமாகின்றது. எனவே நீரிழிவு நோயாளிகள் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுதான் அவசியம். நீங்கள் உங்கள் கால்களைப் பற்றித்தான் கவலை கொள்கின்றீர்கள். ஆனால் கால்களைத் தவிர மற்றைய உறுப்புகளின் நலத்துக்கும் நீரிழிவு நோய் கட்டுப்பாடு அவசியம் என்பதை மனதில் கொள்ளவும். நீரிழிவு நோயினால் கால்கள் பாதிப்படைவதற்கு முக்கிய காரணங்கள் உண்டு.

கால்களில் பாதங்கள் தான் முதலில் - பாதிப்படைகின்றன. நரம்புகள் நீரிழிவு நோயால் பாதிக்கப்படும்போது பாதங்களில் உள்ள உணர்வுகள் அற்றுப் போகின்றன. இதனால் பாதங்களில் வலி உணரப்படுவதில்லை. காயங்கள் உணரப்படுவதில்லை. பாதங்களில் ஏற்படும் காயங்கள் வலி உணர்வு தெரியாதபடியால் எம்மை அறியாமலே பெரிதாகி விடுகின்றன. மேலும் பாதத்தில் உணர்ச்சி இல்லாததால் உடல் பாரம் அழுத்துவது தெரியாமல் பாதங்கள் மரத்துப்போய் - CALLOSITY என்கின்ற காய்த்துப்போன உணர்ச்சி யற்ற தோல்தடிப்பு ஏற்படுகின்றது. இவைகளில் தொற்றுகள் ஏற்பட்டு ஆறாத புண்கள் ஏற்படலாம். நீரிழிவு நோயினால் பாதங்களின் இரத்தோட்டம் பாதிக்கப்பட்டு - காயங்கள், புண்கள் இலகுவில் ஆறாதவையாக மாறுகின்றன. மேலும் - நீரிழிவு, உடலின் தொற்றுநோய் எதிர்ப்புச் சக்தியை குறைப்பதால் காயங்கள் சீழ் பிடிக்கின்றன. சில வேளை இந்த ஆறாத காயங்கள் கால்விரல்களை - அழுகவைத்து விடுகின்றன (GANGRENE). அழுகிய அவயத்தை சத்திர சிகிச்சையால் அகற்றுவதால் மாத்திரமே - நோயாளியின் மிகுதிப் பகுதிகளை மட்டுமல்ல - உயிரையும் கூட காப்பாற்ற முடியும். எனவே நீரிழிவு நோயாளிகள் பாதத்தை - மிக கவனமாக பராமரித்து பாதுகாப்பது அவசியம். இந்தப் பாத பாதுகாப்பு பற்றி - சுருக்கமாக கீழே தருகின்றேன்.

பாதங்களில் காயம் ஏற்படாமல்பார்த்துக்கொள்ளவேண்டும். பாத சருமம் காயாமல் இருக்க MOISTURIZER பசை உபயோகிக்கவேண்டும். அணிகின்ற காலணிகள் பாதங்கள், கால்விரல்களை இறுக்காமல் இருக்க வேண்டும். நிற்கும் போது பாதங்கள், உடல் பாரத்தை தாங்குகின்ற மாதிரி காலணிகளின் உட்பகுதிகள் PADDING செய்யப்பட வேண்டும். வெறுங்காலோடு நடமாடக் கூடாது. கால்விரல் நகங்கள் கவனமாக வெட்டப்படவேண்டும். கால்களை ஒவ்வொரு இரவிலும் படுக்கப்போக முன்னர் கழுவி துடைத்து காயங்கள், வெடிப்புகள் தடிப்புகள் உள்ளனவா என்று பார்க்க வேண்டும். பாதங்கள் உலர்ந்து இருக்க வேண்டும். நகங்களை மிகவும் குறுகியதாக வெட்டக் கூடாது. பாதங்களில் உள்ள காய்கள் (CORNS), WARTS என்பவற்றை அகற்ற காரமான கிறீம், மருந்துகள் உபயோகிக்கக் கூடாது. காலணிகள், காலுறைகள் சுத்தமாக பேணப்பட வேண்டும். பாதங்களை முழுக்க மூடியதாக காலணிகள் இருப்பது விரும்பத்தக்கது. பாதங்களுக்கு சுடுநீரில் ஒத்தடம் கொடுப்பதை தவிர்க்கவும். வெப்ப உணர்வை பாதங்கள் இலகுவில் புரிந்து கொள்ள முடியாமலிருப்பதால் - சுடுநீர் ஒத்தடம் தீப்புண்களை ஏற்படுத்தும் என்பதை கவனத்தில் கொள்ளவும். சுருக்கமாக சொல்வதானால் முகத்தை பராமரிப்பது போல் பாதங்களை பராமரியுங்கள் "LOOK AFTER YOUR FOOT LIKE YOUR FACE."

***

கேள்வி: எனது மகள் வயது 5. பிறந்ததிலிருந்து காது கேட்பதில்லை. தற்பொழுது தலைக்குள் - 'எலக்றோனிக் சாதனம்' வைத்து பூட்டி, காதுகேட்க வைக்கலாம் என்று அறிந்தேன். இது பற்றி விவரம் கூறமுடியுமா?

பதில்: நீங்கள் குறிப்பிடும் எலக்றோனிக் சாதனத்தின் பெயர் - COCHLEAR IMPLANT. முற்றாக கேட்கும் திறன் இல்லாதவர்களுக்கு, அல்லது கேட்கும் கருவி (HEARING AIDS) உபயோகித்தும் மிக குறைந்த அளவே கேட்க கூடியவர்களுக்கு அல்லது கருவி உபயோகித்தும் பலன் இல்லாதவர்களுக்கு இந்த COHLEAR IMPLANT கருவி ஒரு வரப்பிரசாதமாகக் கருதப்படுகின்றது.

இந்தக் கருவி இருபகுதிகளைக் கொண்டது. முதலாவது INTERNAL IMPLANT என்ற பகுதி - ஒரு சிறுசத்திர சிகிச்சை மூலம் காதின் பின் புறத்தில் மண்டையோட்டு எலும்பின் மேல் இது பொருத்தப்படும். அடுத்ததாக SPEECH PROCESSOR என்ற பகுதி - வழக்கமான காது கேட்கும் கருவி போல் காதின் வெளிப்புறத்தில் இது வைக்கப்படும்.

இந்தக் கருவி பின்வருமாறு செயற்படுகிறது. ஒலிகள் - கருவியின் ஒலி வாங்கி (MICRO PHONE) மூலம் பெறப்பட்டு மின் அலைகளாக மாற்றப்படுகின்றன. இந்த மின் அலைகள் SPEECH PROCESSOR கருவியினால் விசேட மின் அலைகளாக மாற்றப்படுகின்றன. இவை - ரேடியோ அலைகளாக - பொருத்தப்பட்ட IM-PLANT பகுதிகளுக்கு செலுத்தப்படுகின்றன. இந்த ரேடியோ அலைகளை AUDITORY NERVE என்கின்ற கேட்கும் உணர்வு நரம்புபெற்று மூளைக்கு அனுப்புகிறது. மூளை இந்த அலைகளை - புரியக் கூடிய ஒலிகளாக உணர்ந்து கொள்கின்றது.

இந்த சிகிச்சை 12 மாதத்துக்கு மேற்பட்ட வயதினருக்கு - நரம்பு சம்பந்தப்பட கேட்கும் திறன் குறைந்த வர்களுக்கு - (SENSOR NEURAL HEAR ING LOSS) - இவர்களால் HEARING AIDS போட்டும் பலனில்லாத விடத்து சிபார்சு செய்யப்படுகிறது.

இந்த சிகிச்சையின் பின்னர் சப்தங்களை, ஒலிகளை - புரிந்து கொள்ளும் பயிற்சிக்கு செல்லவேண்டும். இந்த முழுச் சிகிச்சைக்கும் பல லட்சங்கள் தேவைப்படலாம். எதற்கும் ஒரு ENT என்கின்ற - மூக்கு - காது - தொண்டை நிபுணரின் ஆலோசனையைப் பெற்று உங்கள் மகளுக்கு இந்தச் சிகிச்சையால் பலம் ஏற்படுமா என்று அறியவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி தெரிவிக்கின்றோம்

லயன் சீமாட்டி
**திருமதி மதுமதி வசந்தகுமார்**
(யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
அவர்கள், 35 வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த எமது கிராம (விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு) பிரதான வீதியைச் சீர்செய்து தந்தமைக்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முழுமதி சனசமூக நிலையம்,
கோப்பாய் தெற்கு மக்கள்.

(82964)

## கண்ணீர் அஞ்சலி



யா/ குடமியன் அ.த.க.பாடசாலையின் ஆசிரியை திருமதி ஜெயகலா தேவகுமார் அவர்களின் அன்புத் தந்தையார்
**சின்னத்தம்பி மயில்வாகனம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/குடமியன் அ.த.க.பாடசாலை
பாடசாலைச் சமூகம்.

(80264)


Technopark
GameZone
maximum Games
New Games
GTA IV(6)
Raw-2008
StrongHold2
NeedFor Speed U-C
Call Of Duty-5
PC Sales
PC Repeiring
Accessories
Printing , Scanning
Domain Name Registration
Web Designing & Hosting
NET WORK GAMES AVIALABIL NOW
Techno PARK
127/2 கொக்குவில் சந்தி
கொக்குவில்
Web : www.techno-park.biz
Email : info@techno-park.biz



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
1065 சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
14 22 23 26
விருச்சிகம்
20-02-2009
செல்லுபடியாகும் தொடர் இல. 500487566 - 500507986
ஜக்பொட் பரிசு ரூபா. 9,877,825/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 218,335 | 20/- | 4,366,700/- |
| 2 இலக்கங்கள் | 20,012 | 40/- | 800,480/- |
| 1 இல. + லக்கினம் | 19,880 | 60/- | 1,192,800/- |
| 2 இல. + லக்கினம் | 1,838 | 200/- | 367,600/- |
| 3 இலக்கங்கள் | 539 | 1000/- | 539,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 9,877,825/- | - |
| மொத்தம் | | | 8,326,580/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 260,658 | | 8,826,580/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 10,365,400/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கண்டி | 500498977-0-08 |
| புத்தளம் | 500502145-7-34 |
| கண்டி | 500499152-0-25 |
| கம்பஹா | 500504288-5-45 |
| ஹம்பாந்தோட்டை | 50048[illegible] |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை


# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் 'தரம் வாய்ந்த ஐஸ்கிறீம் தயாரித்தலும், ஏற்படும் பிரச்சினைகளும் தீர்வும்' என்ற கருப்பொருளில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (204)

* * *

மண்டுவில்,பெப்.23

சாவகச்சேரி நகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுடனான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நகரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களை புனரமைத்தல், நன்கொடை நிதி வழங்கல், செயற்பாட்டை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் நிலையத் தலைவர், செயலாளர் அல்லது நிர்வாக சபை அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளும்படி யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.ஜெகதீசன் கேட்டுள்ளார். (202-59)

* * *

தென்மராட்சிப் பிரதேசக் குழுக் கூட்டங்கள் நாளை செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு பிரதேச விவசாயக்குழுக் கூட்டமும் 10.15 மணிக்கு பிரதேச சுற்றாடல் சுகாதாரக் குழுக்கூட்டமும் 11 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறும் என தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (202-59)

## கோப்பாய், நீர்வேலியில் கால்நடைகளைக் கட்டிவளர்க்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.23

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்களில் நெல் அறுவடை முடியும் வரை வளர்ப்புக் கால் நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச வயல் நிலங்களில் விவசாயிகள் மேற்கொண்ட நெற்செய்கை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

அறுவடை நடைபெறும் இந்த சமயத்தில் சிலர் கால்நடைகளை மேய விடுகின்றனர். இவை வயல்களை நாசம் செய்கின்றன.

ஆகையால் அறுவடை முடியும் வரை மக்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202-224)

## பெண்களுக்கான கிரிக்கெட், உதைபந்தாட்டம்

கரவெட்டி,பெப்.23

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட், உதைபந்தாட்டம் ஆகியன இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நக்கீரன் வி.க., பருத்தித்துறை ஐக்கியம் வி.க., சென். அன்ரனீஸ் வி.க., வல்வை, சென். தோமஸ் வி.க. ஆகிய விளையாட்டுக் கழகங்களும் -

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நக்கீரன் வி.க., பருத்தித்துறை ஐக்கியம் வி.க., சென். தோமஸ் வி.க. ஆகிய விளையாட்டுக் கழகங்களும்-மோதவிருக்கின்றன. (1-70)

## மணமகள் தேவை

சுவீடன் P.R. உடைய தற்போது நோர்வேயில் டிசைனிங் இஞ்சினியராகக் கடமையாற்றும் 1977 ஆண்டு, சுவாதி நட்சத்திரம், 4ஆம் பாதம் கொண்ட மணமகனுக்கு டாக்டர், இஞ்சினியர், B.Sc. அல்லது [illegible] சிங் [illegible]
தொடர்பு: 0776030072, 021 2240042

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தா
**பிரம்மஸ்ரீ மகா கணபதி சர்மா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

நு.சத்தியநாதன்
(நாதஸ்வர வித்துவான்)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் திரு.யே.இக்னேசியஸ் (பிரபா) அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் **பயஸ் யேசுதாசன்** *(ஸ்ரீபன்)*
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

(82951)

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான ஆதீன கர்த்தா
**பிரம்மஸ்ரீ மஹாகணபதிசர்மா**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

விளை வேலி,
கல்வயல் வாழ் மக்கள்.

(82956)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி பெலிசிற்றா பாக்கியராணி அருளப்பு றிச்மன்ட் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி றிச்மன்ட் மேரி யோசேப்பின்**
மறைவு குறித்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவரை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள்,
யா/புனித சாள்ஸ் ம.வி.

(82947)

## ஏல விற்பனை

**மின்சாரப் பொருள்கள்**

மின்மோட்டர்கள்
குளிர் சாதனப் பெட்டி
மின் விசிறிகள்
மைக்கோன், இன்னும் பல

**அலுவலகப் பொருள்கள்**

கந்தோர் மேசைகள் (முதிரை)
கதிரைகள்
தட்டெழுத்து, றோணியோ இயந்திரங்கள்
சிகரெட், பற்றரி விற்பனைப் பெட்டிகள் (பிளாஸ்ரிக்)
இராக்கைகள் (இரும்பு, மரம்)
இரும்புப் பெட்டகங்கள்
சைக்கிள்
சோக்கேஸ் (கண்ணாடி, மரம்)
மேடைத் தராசுகள்
பாவித்த தகரப் பீப்பாக்கள்
வெற்றுப் போத்தல்கள் இன்னும் பல

இடம்: **யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**
மணிக்கூட்டு வீதி (யாழ்.பொலிஸ் அருகில்)
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 28.02.2009 சனிக்கிழமை, மு.ப. 10 மணிக்கு
பொருள்களைப் பார்வையிடும் நாள்கள்: 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை

குறிப்பு: ஏலத்தில் விற்பனையாகும் பொருள்கள், முற்றாக பணம் செலுத்தப்பட்டு, உடன் அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

நிர்வாகம்.

(82917)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி



உதிப்பு:
24.07.1949

உதிர்வு:
24.01.2009

*எமது வித்தியாலய ஆசிரியை செல்வி.ந.மனோன்மணி அவர்களின் அன்புச் சகோதரி*
**திருமதி ஆனந்தராசா முத்துலட்சுமி**
அவர்கள் கடந்த 24.01.2009 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், வரணி மகா வித்தியாலயம், வரணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச்சரம்..... செய்திச்சரம்.....

## காக்கைதீவுத் துறைமுகம் புனரமைக்கப்படவுள்ளது

ஆனைக்கோட்டை, பெப்.23

காக்கைதீவு மீன்பிடித் துறைமுகம் ஐந்து இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவிருப்பதாக சாவற்கட்டுக் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கத்திடம் நாம் விடுத்த கோரிக்கையின் பயனாகவே இத்துறைமுகம்புனரமைப்புச் செய்து தரப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணப் பொறியியலாளர் வருகை தந்து மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-20)

## கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதி புனரமைக்கப்பட்டது

கோப்பாய், பெப்.23

கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதி வலி.கிழக்கு பிரதேச சபையால் செப்பனிடப்பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் மாணவர்கள், விவசாயிகள் போக்கு வரத்தினை இலகுவாக மேற்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் பல்வேறு தரப்பினரையும் வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-72)

## கலைஞர் விவரத் திரட்டு தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையால் வெளியிடப்படவிருக்கும் கலைஞர் விவரத் திரட்டுத் தொகுதி 1 நூல் வெளியீடு தொடர்பாகவும் மற்றும் கலாசாரப் பேரவைக் கீதம் சம்பந்தமாகவும் கலந்துரையாடுவதற்கான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (202-78)

## வடமராட்சி மணற்காடு இடைத் தங்கல் முகாமிலுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம்

வண்ணை, பெப்.23

வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு மணற்காடு இடைத் தங்கல் முகாமில் இருக்கும் 531 குடும்பங்களுக்கு கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் உலர் உணவு நிவாரணம் வழங்கி வருகிறது.

பெப்ரவரி மாத நிவாரணத்தில் அரிசி, மா, சீனி, பருப்பு என்பன வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்பாக தை மாதத்திற்குரிய நிவாரணம் நிறுவனத்தால் வழங்கப்பட்டதாகவும், நிவாரணம் வழங்குவதற்காக 4, லட்சத்து 79, ஆயிரத்து 995 ரூபா ஒரு தடவைக்கு நிறுவனம் செலவு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-160)

## தென்மராட்சிப் பிரதேச வாகன உரிமையாளர்கள் வரி செலுத்துவதில் அக்கறை

யாழ்ப்பாணம், பெப்.23

மோட்டார் வாகனங்களுக்குரிய இவ்வருடத்திற்கான வரி செலுத்துவதில் தென்மராட்சி பிரதேச வாகனச் சொந்தக்காரர்கள் பெரிதும் அக்கறை காட்டியுள்ளனர்.

மோட்டார் வாகன வரி செலுத்துவதற்கு இவ்வருடத்தில் ஒதுக்கப்பட்ட தினங்களில் நேற்று முன்தினம் வரையான 25 நாள்களில் 3 ஆயிரத்து 900 பேர் தமது வாகனங்களுக்கு வரியினைச் செலுத்தியுள்ளதாக பிரதேச செயலக மோட்டார் வாகன போக்குவரத்துப் பிரிவின் புள்ளி விவரங்கள்தெரிவிக்கின்றன.

பிரதேசத்தில் 5 ஆயிரத்து 300 வாகனங்கள் பாவனையில் உள்ளதால் மார்ச் மாத இறுதிக்குள் அனைத்து வாகனங்களுக்கும் வரி செலுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## யாழ்.பிரதேச 'கலாசார மலர்' வெளியிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவையால் எதிர்வரும் மேமாதம் 'கலாசார மலர்' ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த மலருக்கான ஆக்கங்கள் யாவும் பொதுக்கலை, கலாசார அபிவிருத்தி, நடனம், இசை, கூத்து, கவிதை, நாடகம் மற்றும் யாழ்ப்பாணக் கலாசாரம் சார்ந்த விடயப் பரப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும் என கூறப்படுகின்றது.

இந்த மலருக்கான ஆக்கங்களை அடுத்த மாதம் 31 ஆம் திகதி முன்னர் யாழ். பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலருமாகிய ம.ஜெகூ அறிவித்துள்ளார். (204)

## சங்கானை மாவடி வைரவர் ஆலயத்தில் திருடர்கள் கைவரிசை

சங்கானை, பெப்.23

சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூலஸ்தானம், முருகன், பிள்ளையார் விக்கிரகங்கள் யாவும் புரட்டி எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஒலிபெருக்கி மின்சாதன உபகரணங்கள் இருந்த அறை உடைக்கப்பட்டு பல பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

ஆலய நிர்வாகத்தினரால் மானிப்பாய் பொலிஸிலும், கிராம அலுவலரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (202-29)

## பன்றித் தலைச்சி ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.23

பிரசித்திபெற்ற மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் அடுத்த மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

உற்சவம் நடத்துவது தொடர்பாக உரிய தரப்பினருடனான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி முற் பகல் 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாஸன் அறிவித்துள்ளார். (202-207)

## இளைஞர், யுவதிகளுக்கு கியூடெக் நிறுவனம் பல்துறைசார் பயிற்சி

வண்ணை, பெப்.23

வலி.வடக்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஏழு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 144 இளைஞர், யுவதிகளுக்கு கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் பல்துறைசார் பயிற்சி நெறிகளை வழங்கியுள்ளது.

அதன்படி கணனி கற்கைநெறியில் 75 பேரும், தையல் பயிற்சியில் 23 பேரும், புடைவை அலங்கார பயிற்சியில் 16 பேரும், கனரக மற்றும் சாரதிப் பயிற்சியில் 30 பேரும் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

இவர்களுக்கென சான்றிதழ் வழங்கும் வைபவம் இம்மாதம் முற்பகுதியில் இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்றது. (202-160)

## சர்வதேச மொழித் தினம்

யாழ்ப்பாணம், பெப்.23

சர்வதேச தாய்மொழித் தினம் வல்வை சிதம்பராக் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சேவாலங்கா நிறுவன உளசமூகப் பணியாளர் செல்வி ந.பிரியா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சைவப் புலவர் பொன். சுகந்தனும் சிறப்பு விருந்தினராக கல்லூரி அதிபர் சி.மகேந்திரனும் கலந்து கொள்வர்.

சேவாலங்கா நிறுவன உளசமூகப் பிரிவால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (202-23)

# கல்விச் சாலைக் காட்சிகள்



குடத்தனை அ.த.க.பாடசாலையில் சாரணர்களுடன் அதிபர் மா. நவநீதமணி, பொறுப்பாசிரியர்கள் சோ.ஞானமுரளி, சு.இந்திரதாஸ் ஆகியோர் உடனிருக்கிறார்கள்.



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவின் போது மாணவர்களுடன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், சிவஸ்ரீ வீரபத்திரக் குருக்கள், போதகர் ரி.எச்.வசந்தகுமார் அடிகளார், கல்லூரி அதிபர், பிரதி அதிபர், ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்:தென்னவன்)



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.



பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் எஸ்.சிதம்பரநாதனும் விருந்தினர்களும் அதிபர் எஸ்.அருமைச்சந்திரன் தலைமையில் மாணவர்களால் வரவேற்கப்படுகின்றனர். (218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க தபக்காலம் புதனன்று ஆரம்பம்

வண்ணை, பெப்.23

கத்தோலிக்க மக்கள் வருடாந்தம் அனுஷ்டிக்கும் தபக்காலம் நாளை மறு தினம் விபூதிப் புதனுடன் ஆரம்பமாக வுள்ளது.

தபக்காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4 மணிக்கு யாழ்.புனித மரியாள் தேவாலயத் திற்கு வெளியே அமைந்துள்ள 14 திருப் பாடுகளின் ஸ்தானங்களிலும் விசேட வழிபாடுகள் நடைபெறுமென ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி ம.றெஜி இரா ஜேஸ்வரன் அடிகள் தெரிவித்துள்ளார்.

ஆறாம் வெள்ளிக்கிழமையான ஏப்ரல் 3 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஆலயத் தின் முன்றலில் அமைந்துள்ள வியாகுல மாதா கோயிலில் சிறப்பு வழிபாடு நடை பெறும்.ஆயத்த வழிபாடுகள் மார்ச் 31 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற இருப் பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202-160)

## தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து அவுஸ்திரேலிய தலைநகரில் தமிழ் இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் பேரணி

சுதந்திர தமிழீழ கோரிக்கையை முன் வைத்து அவுஸ்திரேலியாவின் தலைநகர் கன்பராவில் தமிழ் இளையோர் அமைப் பின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றது.

சுமார் 2ஆயிரத்து 500 இற்கு மேற் பட்டோர் கலந்து கொண்ட இப்பேரணி தலைநகர் கன்பராவின் பெரு வீதிகளில் எழுச்சியுடன் நடைபெற்றது.

கன்பராவில் உள்ள நோர்வே தூதரகத் துக்கு முன்பாகக் கூடிய மக்கள் ''நோர்வே .....தமிழ் மக்களை காப்பாற்று'', ''நோர்வே ......இரட்டை வேடம் போடாதே'', ''சிறிலங்கா கொலைகளை நிறுத்து'', ''தமிழ் மக்கள் கேட்பது தமிழீழம்'', ''எங்கள் தலைவன் பிரபாகரன்'', ''சூரிய தலைவன் பிரபாகரன்'' போன்ற முழக்கங் களை எழுப்பினர்.

தமிழ் இளையோர் அமைப்பின் பிர திநிதிகள் நோர்வே தூதரக பிரதி நிதி களைச் சந்தித்து உரையாற்றினர்.

அதன் பின்னர், ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மனி, ஜப்பான், இந்திய தூதரகங்க ளுக்கு முன்பாகப் பேரணிகள் நடைபெற்று அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக நிறைவு பெற்றது.

ஒவ்வொரு தூதரக பிரதிநிதிகளையும் சந்தித்த இளையோர் அமைப்பின் பிரதி நிதிகள் அவர்களுக்கு தாயகத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள மனிதப் பேர வலத்தை தெளிவாக எடுத்துக் கூறிய துடன், அங்கு தமிழ் மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் கொடூரங்கள் தொடர்பு டைய நிழற்படங்களையும் தூதரகப் பிரதி நிதிகளிடம் காண்பித்தனர்.

மிகக் கொடூரமான சூழ்நிலைக்கு முகம் கொடுத்துவரும் தமிழ் மக்களை எண்ணும் போது கவலையளிப்பதாகவும் அவர்க ளுக்காக இங்கு இவ்வாறான ஒரு மாபெ ரும் பேரணியைப் பார்க்கும்போது மகிழ்ச்சி யாக உள்ளதாகவும் இங்கு தமக்கு வழங்கப் பட்ட மனுவை தமது அரசிடம் சேர்ப்பிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் ஜேர் மன், அமெரிக்கத் தூதரகப் பிரதி நிதிகள் பேரணியில் உரையாற்று கையில் கூறினர்.

இந்தியத் தூதரகத்துக்கு முன்பாகப் பேரணி நடைபெற்றபோது ''இந்திய அரசே தமிழ் மக்களைக் காப்பாற்று'', ''சோனியா தமிழர்களைக் கொல்லாதே'', ''காந்தி தேசமே, கொலைகளை நிறுத்து'' என முழக் கம் எழுப்பினர்.

அமெரிக்கத் தூதரகத்துடன் பேரணி நிறைவு பெற்றது. அதன் பின்னர், இளை யோர் அமைப்பின் பிரதிநிதிகள் கன்ப ராவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்குச் சென்று அதன் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாற்றினர்.

இதன் பின்னர், இளையோர் அமைப் பின் பிரதிநிதிகள் இருவர் கன்பராவில் அமைந் துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவல கத்துக்குச் சென்று ஆசிய- பசுபிக் பகுதி களின் செயலாளர் ரிச்சர்ட் ரவளை சந்தித்து, ஈழத்தில் நடைபெறும் சிறி லங்கா இராணு வத்தின் கொடூரமான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் போராட்டத்தின் நியாயத்தை விரிவாக எடுத்துக் கூறினர்.

அப்போது, ரிச்சர்ட் ரவள் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் மனவருத்தத்தையும் தெரிவித்ததோடு எமது மக்களின் உரிமைக் குரலின் நோக்கம் நியாயமானது என்றும் அதற்குதான் முக்கியத்துவம் கொடுப்பேன் என்றும் கையளிக்கப்பட்ட மனுவை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பேன் என்றும் உறுதியளித்தார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் செயலாளரை சந்தித்து தமிழ் இளையோர் தமிழீழத்தில் தமிழர் நிலை தொடர்பாக விளக்கமளித்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் அகதிகள் தொடர்பாக தாம் தமது தலைமைப்பீடத் திற்குத் தெரிவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான செயலாளர் தெரிவித்தார்.

(203)

## தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் மீண்டும் கச்சாய் ஊடாக மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், பெப்.23

தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கொடிகாமத்திலி ருந்து கச்சாய் வீதி ஊடாக யாழ்ப்பாணத் திற்கான இரு மினிபஸ்சேவைகளை மீண் டும் ஆரம்பித்துள்ளனர்.

அல்லாரை தம்புத் தோட்டத்திற்கு முன் பாகவுள்ள வீதி போக்குவரத்திற்கு விடப் பட்டதையடுத்து மினிபஸ் சேவைகளை நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் மினிபஸ் கச்சாய், சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து முற்பகல் 10 மணிக்குப் புறப்பட்டு அதே மார்க்கமாகக் கொடிகாமத்திற்குச் செல்லும்.

இதேவேளை தினமும் காலை 6.30 மணிக்கு கெற்பேலியிலிருந்து கச்சாய், சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்திற்கான மற்றொரு சேவையும் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பி.ப.2.00மணிக்கு யாழ்ப்பாணத்தி லிருந்து இதே மார்க்கமாகக் கெற்பேலிக்கு பஸ் சேவை இடம்பெறும் என்றும் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து கச் சாய் ஊடாகக் கொடிகாமத்திற்கான மினிபஸ் சேவை மீசாலைச் சந்தி ஊடாக நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (203-207)

## வடக்கு மாகாண சபையின் தலைமை வளாகம் மாங்குளத்தில்; கட்டடவேலை விரைவில் ஆரம்பமாகும்

கொழும்பு, பெப்.23

வடக்கு மாகாண சபையின் தலைமை யகம் மாங்குளத்தில் அமைக்கப்படும்.

வடக்கு மாகாண சபையின் ஆளுநர் டக்சன் சந்திரலா இத்தகவலைத் தெரிவித் தார்.

வடக்கு மாகாணத்தின் மத்திய பிரதேச மாக விளங்கும் மாங்குளத்தில் மாகாண சபையின் தலைமையக வளா கத்தை அமைக்க முடிவெடுக்கப்பட் டுள்ளது. அதற்குரிய தலைமை அலுவ லகத்துக்கான வரைபடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டு விட்டன.

மாங்குளம் பகுதியில் விரைவில் கட் டட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மாங்குளம் புதிய நவீன நகரமாக மாற்றப் படும்-என்றும் ஆளுநர் கூறினார்.

மாகாண சபையின் சகல திணைக்களங் களும் ஒரே இடத்தில் இயங்கக் கூடியதாக மாகாண சபை வளாகம் அமைக்கப்படும். சகல மாவட்டங்களில் உள்ளவர்களும் தங்கள் பணிகளை எவ்வித கஷ்டமும் இன்றி மேற்கொள்ள வசதியாக இந்த வளாகம் அமைக்கப்படவிருக்கின்றது- என்றும் ஆளுநர் டக்சன் மேலும் தெரிவித் தார்.

(அ-1)

## அச்செழு, நீர்வேலியில் சட்டவிரோத மின்னிணைப்பால் அடிக்கடி மின் தடை

கோப்பாய், பெப்.23

அச்செழு நீர்வேலிப் பிரதேசங்களில் தொடரும் சட்டவிரோத மின்னிணைப் பால் அடிக்கடி இப் பகுதிகளில் மின்தடை யேற்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் மின்னி ணைப்பைப் பெறும் வேளையில் ஏற் படும் மின் வடங்களின் தொடர்பினால் குறித்த பகுதி முழுவதுக்கும் மின்னி ணைப்புத் துண்டிக்கப்படுவதாகவும், மறு நாள் காலையிலேயே இவை சீர்செய்யப் படக் கூடியதாக இருப்பதாகவும் தெரி விக்கப்படுகின்றது. இதனால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் மேலும் தெரிவித்தனர் (202-72)





திதி: திரயோதசி (23.02.2009)

பெரியப்பா,
எங்கும் சுற்றிப் பார்க்கின்றோம்
எதிலும் மாற்றமில்லை...
காற்று, கடல், வானம் - நேற்றுப் பூத்த
மல்லிகை கூட மாறாமல் தானிருக்க,
மாற்றத்தைத் தந்து நீங்கள் சென்றதெங்கு?
உணர மறுக்குதே உள்ளங்கள் உம் பிரிவை!
உணர்வுடன் கலந்ததல்லவா உங்கள் உறவு?
குறுநகையும் சிறுவிழியும்
எம்மை விட்டு எப்படி ஓடிப் போகும்?
ஆண் சேவலாய் அடைகாத்து வான்வெளியில்
பறக்க வைத்ததை எப்படி மறப்போம்?
எங்கள் வாழ்வுதனுக்கு ஒளி தந்த வள்ளல் நீரல்லவா?
செய்நன்றிக்கு உயிர் கொடுக்க
நாங்கள் கர்ணனும் கும்பகர்ணனும் இல்லையே!
சாதாரண சாமான்யர்களல்லவா?
ஆதலால் இதனை ஏற்றுக்கொள்ளும்
மேலிருந்து எம்மை மேலும் ஆசிர்வதியும்...

நிரந்தர முகவரி:
கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.
தற்போதைய முகவரி:
முதலி கோவில் வீதி,
தாவடி கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் நினைவுகளுடன்...
நாணு பிரதீபன் (டோகா)
துஜீபதாரணி
லிங்கோபன் (ஜேர்மனி),
ராதா.

(82962)


## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மார் போசாக்கின்மையால் பாதிப்பு

வவுனியா, பெப்.23

வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வந்து நலன்புரி நிலையங்களில் தங்கி யுள்ள 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விசேட சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அவர்கள் போதிய போசாக்கு அற்ற நிலையில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளதாகவும்-

அவர்களை விசேட வைத்திய நிபுணர் களின் சிகிச்சைக்கு உட்படுத்த சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்யதுள்ளதாக - சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களைக் கவனிக்க விசேட வைத் தியக்குழு ஒன்று வவுனியாவுக்கு அனுப் பப்படவிருப்பதாகவும் அவர் கூறினார்.

(அ-1)

## வலிகாமம் கிழக்கில் சனசமூக நிலையங்களுக்கு நிதி வழங்கப்படுகின்றது

கோப்பாய், பெப்.23

வலி.கிழக்குப் பிரதேச சபை எல்லைப் பரப்பின்கீழ் உள்ள சனசமூக நிலையங் களிற்கு உப பணிமனைகளூடாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

'அ' தர சனசமூக நிலையங்களுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவும், 'ஆ' தர சனசமூக நிலையங்களுக்கு இரண்டா [illegible] தெரிவிக்கப்படுகிறது (202-72)


## முக்கிய அறிவித்தல்

வடபகுதி துறைமுக ரலி குமாஸ்தாக்கள் கூட்டுறவுச் சங்கம் கணக்காய்வு

மேற்படி சங்கத்தின் கணக்காய்வு 31.07.2008 வரை நடைபெற்று வருவதினால் இச்சங்கத்துடன் தொடர்புடைய அங்கத்தவர்கள், இச்சங்கத்தோடு தொடர்புடைய வருமதி, செல்மதியாளர்கள் தங்களுக்கு ஏதும் வருமதி, செல்மதி இருப்பின் சங்க செயலாளருடன் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு 09.03.2009ஆம் திகதிக்குள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கவும். மற்றும் சங்கம் தொடர்பான ஏதும் விவரம், தகவல்கள் இருப்பின் அவற்றையும் அறியத்தரவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
க.கிருஷ்ணமூர்த்தி
சித்திரமேழி, இளவாலை.

(82971)



## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
20
12
1935



மறைவு
20
03
2002

## அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

எம்மை தவிக்க விட்டுச் சென்ற அப்பாவே!
நேற்றுவரை பக்கத்திலிருந்த உங்களை
இன்றோடு இதயத்திலிருத்தி விட்டு - நாம்
இருளில் தத்தளிக்கின்றோம்
உங்கள் நினைவுகள் எங்கள்
மனங்களில் என்றும் நின்று நிழலாடும்

சங்கம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர் (கனடா).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் தாக்குதலுக்கு இலங்கைப்படை தயார் ஒரு லட்சம் தமிழர்கள் கொல்லப்படும் ஆபத்து



## இப்பேரழிவைத் தடுத்துநிறுத்த முன்வருமாறு சகல கட்சிகளுக்கும் ராமதாஸ் வேண்டுகோள்

சென்னை, பெப். 23

இலங்கையில் பெரும் தாக்குதல் நடத்த இராணுவம் தயாராகி வருகிறது. பீரங்கிகள், டாங்கிகள், விமானப் படையின் துணையுடன் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்படலாம். இதில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொன்று குவிக்கப்படும் அளவுக்கு மனிதப்பேரழிவு ஏற்படலாம்.

எனவே, இந்த மனிதப்பேரழிவை - இனப் படுகொலையைத் தடுக்க, அனைத்துக் கட்சிகளும் முன்வரவேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து, நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைப் படைகள் வீசும் குண்டுகளால், அப்பாவித் தமிழ் மக்கள் அழிந்து வருகின்றனர் என்று பன்னாட்டு அமைப்பான மனித உரிமைக் கண்காணிப்பகம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏறக்குறைய 100 சதுர கி.மீ. பரப்புள்ள பகுதிக்குள் விடுதலைப் புலிகள் இயக்கம் பின் வாங்கிய தில் இருந்தே, இலங்கைப் படையால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு வலயப் பகுதிகள், எஞ்சியுள்ள மருத்துவமனைகள் மீதும் எண்ணற்ற குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன என மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

போர் நடக்கும் பகுதியில் இருந்து 35 ஆயிரம் மக்கள் வெளியேறி விட்டார்கள் என்று இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது.

அடுத்த சில நாட்களில் போர் நடக்கும் பகுதியில் இருந்து எஞ்சியுள்ள 70 ஆயிரம் பேரும் வெளியேறிவிட்டார்கள் என்றும், விடுதலைப் புலிகள் மட்டுமே இருக்கிறார்கள் எனவும் கூறி இலங்கை அரசு ஏமாற்ற முயற்சிக்கலாம்.

இலங்கையில் பெரும் தாக்குதல் நடத்த இராணுவம் தயாராகி வருகிறது. பீரங்கிகள், டாங்கிகள், விமானப் படையின் துணையுடன் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரால் பெரும் தாக்குதல் நடத்தப்படலாம். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொன்று குவிக்கப்படும் அளவுக்கு, மனிதப் பேரழிவாக அது இருக்கும்.

பயங்கரங்களின் பயங்கரம் நடப்பதற்கு மத்திய அரசு இசைவளிக்கப் போகிறதா? அல்லது இந்த இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த எல்லா வழிகளையும் அது பயன்படுத்தப் போகிறதா என்பதே இப்போதைய கேள்வி.

இதனை உணர்ந்து, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த ஆபத்தைத் தடுக்க முன்வர வேண்டும் - என்றார்.

# போர் நிறுத்தத்தை வலியுறுத்தி 100 மணிநேர உண்ணாவிரதம்!

காஞ்சிபுரம், பெப். 23

போர் நிறுத்தத்தை வலியுறுத்தி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் அனைத்துக் கட்சியினரின் 100 மணிநேர உண்ணா விரதப் போராட்டம் காஞ்சியில் நடந்தது.

இலங்கைப் பிரச்சினையில் ஐ.நா.சபை தலையிட வேண்டும், ராஜபக்ஷ, பொன்சேகா ஆகியோரை போர் குற்றவாளிகளாக அறிவிக்க வேண்டும், இலங்கை பிரச்சினையில் மத்திய அரசு உடன் தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தி காஞ்சிபுரம் கெங்கைகொண்டான் மண்டபத்தில் இந்த 100 மணிநேர உண்ணாவிரதம் நடந்தது.

பா.ம.க. மாநில கொள்கை விளக்க செயலாளர் பாசறை செல்வராஜ் தலைமை தாங்கினார். பா.ம.க. மாவட்ட செயலாளர் ஆ.குமாரசாமி, நகர செயலாளர் வி.உமாபதி, கவுன்ஸிலர் சாந்தி சிவலிங்கம், ம.தி.மு.க. நகர செயலாளர் இ.வளையாபதி, ஒன்றியச் செயலாளர் ராவணன், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட துணைச் செயலாளர் அம்பேத்கர் வளவன், ஒய்.எம்.நாராயணசாமி (சி.பி.ஐ.) உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர். நாளை 23 ஆம் திகதியுடன் உண்ணாவிரதம் முடிவடைகிறது.

# ஈழத்தமிழரைக் காக்கக் கோரி மார்ச் 1, 2இல் தமிழகம் எங்கும் 'நாம் தமிழர்' நடை பயணம்

## தொல். திருமாவளவன் அறிவிப்பு



ஈழத் தமிழர் பிரச்சினையை வலியுறுத்தி, மார்ச் முதலாம், இரண்டாம் திகதிகளில் தமிழகம் முழுவதும் உள்ள குக்கிராமங்களில் ''நாம் தமிழர்'' என்ற முழக்கத்துடன் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் நடை பயணம் நடத்தப்படுகிறது - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் அளித்தபேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், தமிழக சட்டத்தரணிகளையும் சாதியின் பெயரைச் சொல்லி ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி திட்டியுள்ளார். அவரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைதுசெய்ய வேண்டும்.

சுப்பிரமணிய சுவாமி மீது முட்டை வீசப்பட்ட சம்பவத்தில், விடுதலைச் சிறுத்தைகளுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை.

சட்டக்கல்லூரி மாணவர் மோதல் சம்பவத்திலும், உயர் நீதிமன்ற வளாக மோதல் விவகாரத்திலும் பொலிஸார் அத்துமீறிச் செயற்பட்டுள்ளனர்.

இதைப் பார்த்தால், தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் காவல்துறையே ஈடுபடுகிறது என்ற சந்தேகம் எழுகிறது. இது, தி.மு.க. அரசுக்கு எதிரான நடவடிக்கை. காவல் துறையிலுள்ள சில கறுப்பு ஆடுகளை முதல்வர் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை வலியுறுத்தி, மார்ச் 1 மற்றும் 2 ஆகிய திகதிகளில் தமிழகம் முழுவதும் உள்ள குக்கிராமங்களில் 'நாம் தமிழர்' என்ற முழக்கத்துடன் நடை பயணம் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் நடத்தப்படுகிறது - என்றார்.

# இலங்கைக்கு நெருக்கடி கொடுக்க காங். கூட்டணி அரசு தவறிவிட்டது!

## பாரதீய ஜனதாக் கட்சி குற்றச்சாட்டு



விஜயவாடா, பெப். 23

இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினையைத் தீர்க்க, மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு எதுவுமே செய்யவில்லை. இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்க மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு தவறி விட்டது - என்று பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

விஜயவாடாவில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்கள், சொந்த இடத்தை விட்டு துரத்தியடிக்கப்பட்டு உணவுக்கு கூட வழியில்லாமல் தவித்து வருகின்றனர். இலங்கைத் தமிழர்களின் இந்த நிலைமையைக் கண்டு ஒவ்வொரு இந்தியனும் உண்மையிலேயே வருத்தப்படுகிறான். ஆனால், இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்க மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு தவறிவிட்டது.

தமிழர்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்குமாறு உறுதியாகச் சொல்ல மறுக்கிறது. இலங்கைப் பிரச்சினைக்கு எந்த ஒரு தீர்வும் காணாமலேயே வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, கொழும்புக்கு சென்று வருகிறார். விடுதலைப் புலிகள் மீது யாருக்கும் எந்த வித அனுதாபமும் கிடையாது. ஆனால், பாதிக்கப்பட்டுள்ள தமிழரின் நிலைமை குறித்து அனைவருமே கவலைப்படுகின்றனர்.

ஆனால், அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு எதுவுமே செய்யவில்லை. இலங்கை இராணுவத்துக்குத் தார்மீக ஆதரவு அளித்து வருகின்ற மத்திய அரசு, இலங்கை இனப்பிரச்சினையில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# அகதிகளை ஏற்றிவந்த 2 படகோட்டிகள் படகைக் கரையில் விட்டுத் தப்பி ஓட்டம்

இராமேஸ்வரம், பெப்.23

இலங்கையில் இருந்து 13 அகதிகளைப் பிளாஸ்டிக் படகில் மண்டபத்திற்கு ஏற்றிவந்த படகோட்டிகள் 2 பேர் படகை அனாதையாக விட்டு விட்டு தப்பி ஓடிவிட்டனர். அவர்களைப் பொலிஸார் தீவிரமாகத் தேடிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள வவுனியா பகுதியை சேர்ந்த 13 பேர் மன்னார் கடற்கரையில் இருந்து ஒரு பிளாஸ்டிக் படகில் இராமேஸ்வரத்திற்கு வந்தனர். 4 குடும்பங்களைச் சேர்ந்த இவர்களில் 5 பேர் ஆண்கள். 4 பேர் பெண்கள். 3 பேர் சிறுவர்கள். ஒருவர் சிறுமி. இவர்கள் வந்த படகு நேற்றுமுன்தினம் அதிகாலை பாம்பன் குந்துகால் கடற்கரையை வந்தடைந்தது.

படகில் இருந்து இறங்கிய அகதிகள் அனைவரும் பாம்பன் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்தனர். அவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், இவர்களை படகில் அழைத்து வந்த இலங்கைப் படகோட்டிகள் சீலன் மற்றும் ஒருவர் படகை நிறுத்திவிட்டு எஞ்சின், நங்கூரத்தை கடற்கரை ஓரத்தில் பதுக்கி வைத்து விட்டுத் தப்பிச்சென்றமை தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து கடலோரப் பொலிஸார் குந்துகால் கடற்கரைப் பகுதிக்கு விரைந்து சென்று அங்கு சவுக்குத் தோப்புப் பகுதியில் அனாதரவாக நின்ற படகு மற்றும் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நங்கூரத்தை கைப்பற்றினர்.

இதைத்தொடர்ந்து பொலிஸார், மாவட்டம் முழுவதும் சோதனைச்சாவடிகளை உஷார்படுத்தி தப்பி ஓடிய படகோட்டிகள் 2 பேரையும் வலைவீசித் தேடி வருகின்றனர். படகோட்டிகள் இருவரும் இங்கிருந்து ஏதாவது கடத்திச் செல்லலாம் என்ற நோக்கில் படகை கரையிலேயே நிறுத்திவிட்டு தமிழகப் பகுதிக்குள் புகுந்தார்களா? படகோட்டிகள் போர்வையில் ஊடுருவியது விடுதலைப் புலிகளா என்ற கோணத்தில் தீவிர விசாரணை நடந்து வருகிறது.

# சட்டத்தரணிகள் மீதான தாக்குதல்: தமிழகத்தில் இன்று ஆர்ப்பாட்டம்

## வைகோ அறிவிப்பு

சென்னை, பெப்.23

சட்டத்தரணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்தும், சட்டத்தரணிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் தமிழ்நாடு முழுவதும் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகிறது என்று வைகோ கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் பொலிஸார், சட்டத்தரணிகள் மீது நடத்திய அடக்குமுறையைக் கண்டித்து வரும் இன்று காலை 10 மணியளவில் தமிழ்நாடெங்கும் மாவட்டத் தலைநகரங்களிலும் - மாவட்ட ஆட்சியர் - வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு எதிரேயும் கண்டன ஆர்ப்பாட்டத்தை இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்துகிறது.

சட்டத்தரணிகள் மீது இந்தத் தாக்குதலை நடத்த வேண்டும் என்று பல நாட்களாகவே திட்டமிட்டு வந்துள்ளனர். குறிப்பிட்ட 19ஆம் திகதியன்று இந்தத் தாக்குதலை நடத்த வேண்டுமென்று திட்டமிட்டதால் கறுப்புப் பட்டியும், வெள்ளைச் சட்டையும் போட்ட வன்முறைக் கும்பலை உயர் நீதிமன்ற வளாகத்துக்குள் கொண்டு வந்துள்ளனர். சாக்கு மூட்டையில் கற்களைக் கொண்டு வந்துள்ளனர். உயர் நீதிமன்றத்தில் இந்தக் கற்கள் கிடையாது.

பொலிஸ் தலைமை ஆணையர் பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தால் கண்டதும் சுடுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார். பொதுச் சொத்துக்களை நாசம் செய்தால் அதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்; வழக்குப் போடலாம். ஆனால், கண்டவுடன் துப்பாக்கியால் சுடுவோம் என்று பொலிஸ் ஆணையர் கூறுவது சர்வாதிகாரம் - என்றார்.

# இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி தி.மு.க. இளைஞர் அணி மனிதச்சங்கிலி

இலங்கையில் இரு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மனிதச்சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.

சென்னை இராயபுரம் சூரிய நாராயணன் தெருவில் தொடங்கி கிண்டி வரை இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ்நாட்டின் உள்ளாட்சித்துறை அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலாளருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, அமைச்சர் ஸ்டாலினின் மனைவி துர்க்கா, அவரின் மகன் உதயநிதி, கட்சியின் செய்தித் தொடர்பாளர் இளங்கோவன், சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் வின்சென்ட் சின்னதுரை, நடிகர்கள் நெப்போலியன், தியாகு உள்ளிட்ட பெருந்திரளான திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

இந்த மனிதச்சங்கிலியை சென்னை அண்ணாசாலை, மன்றோ சிலை, தேனாம்பேட்டை அறிவாலயம், கிண்டி உட்பட பல்வேறு இடங்களுக்குச் சென்று அமைச்சர் ஸ்டாலின் பார்வையிட்டார். அப்போது அவர் ஊடகவியலாளர்களிடம் பேசியவை வருமாறு -

இலங்கையில் நாள்தோறும் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். அவர்களைக் காப்பற்ற வேண்டும். அதற்காக இரு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பில் இளைஞர் சங்கிலி [illegible] நடைபெறுகின்றது. இதனை ஏற்று இரு தரப்பினரும் ஆயுதங்களைக் கீழே போட்டு போர் நிறுத்தம் ஏற்படுத்த வேண்டும் - என்று கேட்டுக்கொண்டார்.

# நீதித்துறை தனக்குள்ள அதிகாரத்தைப் பாவித்து தி.மு.க. அரசைக் கலைக்க உத்தரவிட வேண்டும்!

## சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் வலியுறுத்து

சென்னை, பெப். 23

நீதித்துறை தனக்குள்ள அதிகாரத்தைக் கையில் எடுத்து 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி தி.மு.க. அரசைக் கலைக்க உத்தரவிட வேண்டுமென்று சென்னையில் நேற்று நடைபெற்ற சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கூட்டத்தில், பொலிஸாருக்கும், சட்டத்தரணிகளுக்கும் இடையே நடந்த மோதல் மற்றும் அதனை தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து சட்டத்தரணிகள் சங்க நிர்வாகிகள் ஆவேசமாக கருத்துக்களைத் தெரிவித்தனர். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பால்கனகராஜ் பேசும்போது -

கடந்த 19ஆம் திகதி உயர் நீதிமன்றில் நீதிபதிகள் மீதும் கற்கள் வீசப்பட்டுள்ளன. நீதித்துறைக்கும், சட்டத்தரணிகளுக்கும் இடையே இருந்த பிரச்சினை சட்டத்தரணிகள், பொலிஸ் [illegible] உருவாக்கப்பட்டுள்ளது. முட்டை வீசியதில் தவறு செய்த 20 பேர் மீது நடவடிக்கை எடுப்பதை விட்டு விட்டு,ஒட்டு மொத்த சட்டத்தரணிகளையும் தாக்கியுள்ளனர். இது நீதித்துறைக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானமாகும்- என்றார்.

மூத்த சட்டத்தரணி ஒருவர் ஆவேச மடைந்து பேசியவை வருமாறு -

சட்டம்-ஒழுங்கை பாதுகாக்கும் பொறுப்பு உயர்நீதிமன்றத்திற்கும் உள்ளது. இதுபோன்ற நிலையில் உயர்நீதிமன்றம் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதித்துறை அவசர நிலையை பிரகடனம் செய்ய வேண்டும். மேலும் இந்த அரசை கலைக்க அரசியல் சாசனத்தின் 356ஆவது பிரிவைப் பயன்படுத்த வேண்டுமென்று தலைமை நீதிபதியிடம் கோர வேண்டும் - என்றார்.

கூட்டத்தில், தமிழக டி.ஜி.பி., சென்னை பொலிஸ் கமிஷனர், இணை கமிஷனர், துணை கமிஷனர்கள் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து அவர்களைக் கைதுசெய்ய வேண்டும் எனப் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு எதிராக சாதனை படைத்தது இலங்கை! இரட்டைச்சதம் விளாசினர் மஹேலவும் சமரவீரவும்

கராச்சி, பெப். 23

கராச்சியில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றும் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் விளாசித் தள்ளினர்.

நேற்று ஆட்ட நேரம் முடிவடைவதற்கு சற்று முன்னர் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 664 ஓட்டங்கள் என்ற நிலையில் தனது ஆட்டத்தை இலங்கை அணி நிறுத்தியது.

கராச்சி தேசிய மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இலங்கை அணித்தலைவரான மஹேல ஜெயவர்த்தனவும் டிலான் சமரவீரவும் நான்காவது விக்கெட்டிற்காக 437 ஓட்டங்களை பெற்று உலக சாதனையொன்றை ஏற்படுத்தியுள்ளனர். இருவருமே இரட்டை சதங்களைத் தாண்டியமை மற்றொரு அம்சமாகும்.

நான்காவது விக்கெட்டிற்காக இருவரும் பெற்றுக் கொண்ட 437 ஓட்டங்களே டெஸ்ட் போட்டியொன்றில் 4ஆவது விக்கெட்டிற்காகப் பெறப்பட்ட அதி கூடிய ஓட்டங்களாகும்.

1957 இல் மேற்கிந்திய அணிக்கு எதிராக இங்கிலாந்தின் கொலின் கௌட்றி மற்றும் பீட்டர் மே இணைந்து பெற்ற 411 ஓட்ட சாதனையை இவர்கள் முறியடித்தனர்.

முன்னதாக முதல் நாளில் இலங்கை அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 406 ஓட்டங்கள் குவித்திருந்தது.

ஜெயவர்த்தனா தலைமையிலான இலங்கைக் கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தான் - இலங்கை அணிகள்



இடையே 2 டெஸ்ட் கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி கராச்சியில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. 14 மாதங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் பங்கேற்கும் முதல் டெஸ்ட் இதுவாகும்.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது. இதன்படி வர்ணபுராவும், புதுமுகம் பரணவிதாரணவும் இலங்கையின் ஆட்டத்தைத் தொடங்கினார்கள்.

யாசிர் அராபாத் வீசிய முதல் ஓவரிலேயே பரணவிதாரண, ஸ்லிப்பில் நின்ற மிஸ்பா உல்-ஹக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தனது முதல் சர்வதேச டெஸ்டில் ஆடிய பரணவிதாரண முதல் பந்திலேயே வெளியேற்றப்பட்டார். அடுத்து இறங்கிய சங்கக்கார அணியின் சரிவைத் தடுத்து நிறுத்தினார்.

இதன் பிறகு இலங்கை துடுப்பாட்டக்காரர்களின் ஆதிக்கம் மேலோங்கியது. அதிரடியாக ஆடி தனது அரை சதத்தைக் கடந்த வர்ணபுரா 59 ஓட்டங்களில் (48 பந்து, 9 பவுண்டரி) ஆட்டமிழந்தார். இதையடுத்து 3ஆவது விக்கெட்டுக்கு அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா ஆடவந்தார்.

இந்தத் தொடருடன் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகவுள்ள ஜெயவர்த்தனா, நிதான்மாகத் தனது ஆட்டத்தை தொடங்கினார். அவர் 17 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, முதல் கண்டத்தில் இருந்து தப்பினார். உமர்குல் பந்து வீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்மிழந்திருப்பார். ஆனால் அதில் தப்பினார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 177 ஓட்டங்களைத் தொட்டபோது, சங்கக்கார 70 ஓட்டங்களில் (104 பந்து, 9 பவுண்டரி) ஆட்டமிழந்தார். இதையடுத்து சமரவீர களம்புகுந்தார்.

சங்கக்கார வெளியேறிய அடுத்த ஓவரிலேயே ஜெயவர்த்தனவும் ஆட்டமிழந்திருக்க வேண்டும். அவர் 43 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவர் அடித்த எளிதான பிடியை மிஸ்பா உல்ஹக் தவறவிட்டார். இரண்டு முறை வாழ்வுபெற்ற ஜெயவர்த்தனா, அதனை நன்கு பயன்படுத்திக்கொண்டார். மறுமுனையில் சமரவீர ஒரு நாள் ஆட்டம் போன்று தனது துடுப்பாட்டத்தில் வேகம் காட்டினார். அணியின் ஓட்ட சராசரி 4 ஓட்டங்களுக்கு மேலாகச் சென்று கொண்டிருந்ததால், இலங்கையின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தை மூன்று விக்கெட் இழப்பிற்கு 403 ஓட்டங்கள் என்ற ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் தனது நாலாவது விக்கெட்டை இழந்தது.

அணித் தலைவர் மஹேல ஜயவர்தன 240 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை சொய்ப் மலிக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இதற்கு சில நிமிடங்களுக்குப் பின்னர் 231 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை டிலான் சமரவீர ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் 7 விக்கெட் இழப்புக்கு 664 என்ற நிலையில் இலங்கை அணி தனது முதல் இனிங்ஸ் ஆட்டத்தை நிறுத்தி பாகிஸ்தானை தொடர்ந்து துடுப்பாட அழைத்தது.

ஆட்டநேர இறுதியில் பாகிஸ்தான் ஒரு விக்கெட்டை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முரளிதரனின் பந்து வீச்சில் சல்மான் பட் ஆட்டமிழந்தார்.

3ஆம் நாள் ஆட்டம் இன்று.

# யாழ்.வீரர்களை தேசிய மட்டத்துக்கு இணைக்கும் செயலமர்வும் பயிற்சியும் அடுத்தமாதம் நடைபெறும்

## இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அரவிந்தவின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் கிரிக்கெட் வீரர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கான செயலமர்வும் பயிற்சியும் அடுத்தமாதம் 13 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். பரியோவான் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இதுதொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைக் கல்வி அமைச்சு ஸ்ரீ லங்கா துடுப்பாட்டச் சபை மற்றும் அரவிந்த டீ சில்வா துடுப்பாட்ட நிதியம் என்பன ஒருங்கிணைந்து நடத்தும் வட மாகாண மட்ட துடுப்பாட்டப் போட்டிகள் மூலம் சிறந்த துடுப்பாட்ட வீரர்களைத் தெரிவு செய்யும் செயலமர்வினையும் பயிற்சியினையும் 3 நாள்களுக்கு அடுத்த மாதம் 13 ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிகளில் யாழ். பரியோவான் கல்லூரியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக துடுப்பாட்டச் சபையின் முன்னாள் தலைவர் அரவிந்த டீ சில்வா தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பதினொரு பாடசாலைகளிலிருந்து 70 இற்கும் மேற்பட்ட துடுப் பாட்ட வீரர்களுக்கு தகுந்த துடுப்பாட்டப் பயிற்சிகளை வழங்கி அவர்களுக்குள் சிறந்த 7 வீரர்களைத் தெரிவு செய்து தேசிய மட்டத்தில் இணைந்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று 15 வயதுக்கு மேற்பட்ட 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 வயதுக்குக் குறைந்த மாணவர்களுக்கு (அதாவது 1991 - 1992 ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்) சந்தர்ப்பம் வழங்குவதற்காக பாடசாலை மட்டத்தில் துடுப்பாட்ட வீரர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் ஊடாக எதிர் வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பெற் றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கான அனுசரணையை அதாவது மேலே குறிப்பிடப் பட்டுள்ள மூன்று நாள் பயிற்சியின் போது உணவு, தங்குமிட வசதி, விளையாட்டு உபகரணங்கள், உடை என்பனவற்றை வழங் குவதற்கு கொக்கோகோலா நிறு வனம் முன்வந்துள்ளதாக அரவிந் டீ சில்வா துடுப்பாட்ட நிதியம் அறிவிக் கின்றது.

இந்த வைபவம் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதால் இதனைக் கண்டுகளிப்பதற்கான சந்தர்ப்பங்களை பொதுமக்களுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடுகளை படையினர் செய்துள்ளனர்.

இந்தப் போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன - என்றுள்ளது. (1)

## 4ஆவது டெஸ்டில் பிளின்ரொப் இல்லை

பார்ப டோஸ், பெப்.23

இங்கிலாந்து சகலதுறை வீரர் ஆன்ட்ரூ பிளின்ரொப் காயம் காரணமாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 4ஆவது டெஸ்ட்டில் பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆன்டிகுவாவில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட்டின்போது ஆன்ட்ரூ பிளின்ரொப் காயத்தால் அவதிப்பட்டார். அவருக்கு வலது இடுப்பில் ஏற்பட்ட காயம் தீவிரமடைந்ததை அடுத்து 4ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் பங்கேற்கமாட்டார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஐ.பி.எல். போட்டிகளில் சென்னை அணி சார்பில் பிளின்டொப் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட தன்னால் முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல். போட்டியைப் புறக்கணிக்கும் பொண்டிங்கின் முடிவுக்கு வரவேற்பு!

சிட்னி, பெப்.23

ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்பதில்லை என்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங்கின் முடிவுக்கு அந்நாட்டு பத்தி ரிகை கள் பாராட்டுத் தெரிவித்துள்ளன. கொல்கத்தா அணி சார்பில் விளையாடி வந்த ரிக்கி பொண்டிங், அவுஸ்திரேலிய அணியில் கூடுதல் கவனம் செலுத்து வதற்காக இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியிலி ருந்து விலகுகின்றார் என அறி வித்தார்.

இந்த முடிவை முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோ பாராட்டியிருக் கிறார். அவுஸ்திரேலிய நாளிதழ்கள் மற்றும் பத்திரிகைகளும் பொண்டிங்கின் முடிவைப் பாராட்டியுள்ளன. பொண்டிங்கின் முடிவு துணிச்சலானது. மற்றும் அவருக்கு எதிரான விமர்சனங்களுக்கு பதிலளிக்கக் கூடியது என்று நாளிதழ்கள் கருத்து தெரிவித்துள்ளன.

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் பணிபுரியும் ஊழியர்
திருமதி கமல்ராஜ் பவிதா
அவர்களின் பாசமிகு தாயார்

### நித்தியானந்தராஜா நீலலோஜினி

அவர்கள் காலமானதால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த துயரைத் தெரி விப்பதுடன் அன்னாரது ஆன்மா இளைப்பாற இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி கணேசபிள்ளை இராசலட்சுமி



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வங்கியடி, இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை இராசலட்சுமி நேற்று(22.02.2009)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கணேசபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - திரவியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வராணி, சிவகுமார் (ஜேர்மனி), சிவயோகம், பவானிகமலா, உதயகுமாரி, அனுஜா, (கௌரி) ஆகியோரின் அன்புத் தாயும் தர்மராசா, சித்திராதேவி, (ஜேர்மனி), சிவபாலன், கமலநாதன், சிவகுமார் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற மகாதேவா, இராஜேஸ்வரி, அன்னலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தேவராசா (இத்தாலி), நவரத்தினராசா, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் பூமணி, காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் பகவதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் சிதம்பரேஸ்வரி, செல்லம்மா, சிவன்செயல்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுகிர்தன், வைஷ்ணவி, சுஜீவன், வியாபகன், சிந்து, அலைமகள், சிவகங்கா, சிந்துஜன், நர்த்தனா, ஜீவனா, நர்த்தனன், நிவேதனன், நிவேதா, ருசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.02.2009)திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்கியடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் மயில்வாகனம்



புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் மயில்வாகனம் நேற்று(22.02.2009) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் -செல்வம் தம்பதியரின் அன்பு மகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் சிவயோகன் (C.T.B.), கண்ணதாசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகிர்தாவின் மாமனும் கிருஷ்சிகனின் பேரனும் கந்தசாமி, சரஸ்வதி, அமரர் தாமோதரம்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் சாந்தநாயகி, கந்தசாமி, திருச்செல்வம், தனபாக்கியம், புவனேஸ்வரி, சண்முகவடிவேல், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும் ஜெகவாணி, ஜெகநிதி (ஆசிரியை), கோமளேஸ்வரன், ஜெகன் மோகன், கிருஷ்ண குமார், கிருஷ்ணவேணி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.02.2009) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக புத்தூர் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் வடக்கு, புத்தூர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் சிக்கியுள்ளோரை மீட்க மனிதாபிமானக் கூட்டுச் செயலணி

## அமெ. வழிகாட்டலில் இணைத் தலைமைகள் ஏற்பாடாம்

கொழும்பு, பெப். 23

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களைப் பாதுகாப்பாக மீட்டு வெளியேற்றுவதற்கான மனிதாபிமான நடவடிக்கையொன்றை முன்னெடுப்பது குறித்து இணைத்தலைமை நாடுகள் ஆராய்ந்து வருகின்றன எனவும் அமெரிக்கா இந்த நடவடிக்கைக்குத் தலைமை வகிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களை நடுக்கடலில் தரித்துநிற்கும் கப்பலொன்றிற்கு முல்லைத்தீவுக் கடற்பகுதி ஊடாக அழைத்துவரும் மனிதாபிமான திட்டம் குறித்தே ஆராயப்பட்டு வருகின்றதாம்.

இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவின் கப்பல்களையும் விமானங்களையும் பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக ஆராய்வதற்காக அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப்பீடத்தின் உயர்மட்டக்குழுவொன்று கொழும்பிற்கு வந்துள்ளது என்றும் கூறப்பட்டது.

அமெரிக்கா தலைமையிலான மனிதாபிமானக் கூட்டுச் செயலணியின் முயற்சி குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம உறுதிசெய்துள்ளார் என்றும் இது தொடர்பான செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக இணைத்தலைமையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டுடனும் இலங்கை அரசு தனித்தனியாகப் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளாராம்.

மேலும் பல நேச நாடுகளுடனும் பொது மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவது குறித்துத் தாங்கள் ஆராய்ந்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நாடுகள், இலங்கை அரசின் ஆதரவு மற்றும் கண்காணிப்பின் கீழ் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவே இப்பணியை நேரடியாக மேற்கொள்ள வேண்டும் எனக் கருதுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் இவ்வாறான ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது. நட்பு நாட்டிடமிருந்து வந்த வேண்டுகோள் என்பதால் இலங்கை அரசு இதற்கு இணங்கியுள்ள போதிலும், இந்த மனிதாபிமான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதாலும் மற்றும் விநியோக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும் இந்த நடவடிக்கைக்கான உறுதியான திகதியை நிர்ணயிப்பது கடினமாகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)

## விக்னேஸ்வராவில் பயிற்சி நெறிகள்

கரவெட்டி, பெப்.23

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள் ளன.

மனைமுகாமைத்துவம், துணி அச்சிடல், மொழித்திறன்விருத்தி ஆகிய பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறிகளைப் பின்பற்ற விரும்புபவர் கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் வார நாள்களில் பிற்பகல் ஒரு மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் இடையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-170)

# இம்முறையும் இ.தொ.கா., ம.ம.மு. வெற்றிலைச் சின்னத்திலேயேதான்!

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் மேல்மாகாணத் தேர்தலிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பட்டியலில் வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிடவுள்ளன என்று அக்கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

நடந்து முடிந்த மத்திய மாகாணத் தேர்தலில் ஆளும் தரப்புடன் சேர்ந்து போட்டியிட்டதால் மலையகத்தில் தங்கள் கோட்டை என்று கருதப்பட்ட இடங்களிலேயே இக்கட்சிகள் இரண்டும் பலத்த தோல்வி காணும் நிலைமை நேர்ந்தது.

இதனால் எதிர்வரும் மேல்மாகாண சபைத் தேர்தலின்போது கொழும்பு மாவட்டத்திலாவது தனித்துப் போட்டியிடுவதற்கு இக்கட்சிகளின் கீழ்மட்டத் தொண்டர்கள் மத்தியில் ஆலோசனை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

எனினும், ஆளும் தலைமையின் அழுத்தம் காரணமாக, தனித்துப் போட்டியிடும் ஆலோசனையை இக்கட்சிகளின் மூத்த தலைவர்கள் முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டனர் என்று கூறப்படுகின்றது.

இதேசமயம், மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி கொழும்பில் வழமைபோல ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலிலேயே இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்களை நிறுத்தும் என்று தெரிகின்றது.(அ-சி)

# சிவனின் அருளால் அனைவருக்கும் சமாதானமும் சிறந்த எதிர்காலமும் கிடைக்கப் பெறுவதாக

## யாழ்.படைகளின் தளபதி சிவராத்திரி தினச் செய்தி

யாழ்ப்பாணம், பெப்.23

இன்று நீங்கள் கொண்டாடும் மகா சிவராத்திரியின் பயனால் உங்கள் மேன்மையான எண்ணங்கள் நிறைவேறி உங்கள் வாழ்வு சௌபாக்கியமுள்ளதாக ஆகுவதற்கு சிவனின் அருளால் அனைவருக்கும் சமாதானமும் சௌபாக்கியமும், நற்சுகமும், நீண்ட ஆயுளும், சிறந்த எதிர்காலமும் மலர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மொன்டக்க சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

சிவராத்திரியை ஒட்டி விடுத்துள்ள செய்தியில்அவர்தெரிவித்துள்ளமை வருமாறு:

ஆதி காலம் தொட்டு உலகம் முழுவதிலும் உள்ள இந்து பக்தர்கள் பக்தியுடன் கொண்டாடும் மகா சிவராத்திரி வைபவம் யாழ்.பிரதேசத்தில் வாழும் இந்துக்களுக்கும் மிக முக்கிய வைபவம் என்பதை நான் அறிவேன். இன்று கொண்டாடும் சிவராத்திரி யாழ்.மக்கள் மட்டுமன்றி உலக வாழ் இந்து பக்தர்கள் ஒன்றிணைந்து பயபக்தியுடன் ஒரே நேரத்தில் சிவபெருமானுக்கு நடத்தும் பூஜை வழிபாடுகள் மூலமும் உபவாசமிருந்தும் பக்தியை வெளிப்படுத்துகின்றனர்.

சிவனை வழிபடும் யாழ்.இந்து பக்தர்கள் பிரார்த்திப்பதும், நாட்டின் ஏனைய மதத்தவர்களும்தமது மத அனுட்டானங்களின் படி வேண்டுவதும் ஒரே பிரார்த்தனையே ஆகும். நம் நாட்டில் வாழும் சமூகங்களின் சமய கலாசார வழிபாடுகள் வேறுபட்டாலும் அவர்களுக்குள் உள்ள எண்ணங்கள், கருத்துக்கள் பிணைந்திருப்பது அவர்களின் சகோதரத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

இம்முறை சிவனை வழபட்டு, பூஜை வழிபாடுகளுக்கு அப்பால் சென்று உங்கள் சமூகத்தில் சீர்குலைவையும், பிரிவினையையும் உண்டாக்கி எதிர்கால சந்ததியை அழித்தொழிக்கும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர உங்கள் மீதுள்ள கடப்பாட்டை உணர்ந்து கொள்வதன் மூலம் சிவனின் மனித குல மீட்சியின் அர்த்தத்தை உணர்த்த முடியும்- என்றுள்ளது.

# இந்திய மருத்துவக் குழுக்களை இலங்கைக்கு அனுப்பக் கோருகின்றார் தமிழக முதல்வர்

## மன்மோகன், சோனியா, பிரணாப்புக்கு அவர் கடிதம்

கொழும்பு, பெப். 23

இலங்கை யுத்தத்தில் சிக்கிக் காயமடைந்துள்ள தமிழர்களுக்கு சிகிச்சை அளிக்க இந்திய மருத்துவக்குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று கோரும் கடிதம் ஒன்றை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி அனுப்பியுள்ளார்.

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உதவும் வகையில் மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களுடன் மருத்துவக் குழுக்களை அனுப்பிவைப்பதற்கு அவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கை முதல்வர் கருணாநிதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார் என நேற்றுச் செய்திகள் வெளியாகியுள்ளன. (அ-சி)

# கிரிமெட்டிய தாக்குதலில் 21 பேர் சாவு; 20 பேர் காயம்

கொழும்பு, பெப். 23

அம்பாறை இங்கினியாகலவில் உள்ள கிரிமெட்டிய கிராமத்துக்குள் புகுந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் எனப் பாதுகாப்புஅமைச்சு தெரிவித்துள்ளது.

அம்பாறை - பிபில வீதியில், பெரும்பான்மை சமூகத்தவர்கள் அதிகமாக வாழும் கிரிமெட்டிய கிராமத்துக்குள் சனிக்கிழமை மாலை நுழைந்த விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 21 பொது மக்கள் கொல்லப்பட்டனர் எனவும், குழந்தைகள் உட்பட 20 பேர் காயமடைந்தனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த நிலையில் அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த சிலர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஊர்காவற்படையினர் சிலரும் உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அவிசாவளை அயர் தோட்டத்தில் சனியன்று தமிழர் வெட்டிக்கொலை

## பல வீடுகளும் அடித்து நொருக்கப்பட்டன

அவிசாவளை, பாதுக்கை அயர் தோட்டத்தின் குருதல பிரிவில் அமைந்துள்ள தமிழ்க் கிராமத்திற்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கும்பல் ஒன்று அங்கிருந்த கிராமவாசி ஒருவரை வெட்டிக் கொன்றுவிட்டு பல வீடுகளையும் உடைத்துச் சேதமாக்கிச் சென்றுள்ளது எனக் கூறப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

செல்வராஜா (வயது - 50) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவராவார். இவரின் மகன் ஓரிரு மாதங்களுக்கு முன் அயல் கிராமத்தில் உள்ள சிலருடன் சண்டையில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் காரணமாக அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. மலையகத் தமிழ் அரசியல்வாதிகள் உடன் தலையிட்டு பொலிஸ் அதிகாரிகளுடன் பேசி அக்கிராமத்தின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கனகலிங்கம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை கனகலிங்கம் நேற்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசையா மற்றும் இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கலாநிதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் சின்னம்மா, இரத்தினம்மா, அன்னம்மா, தருமலிங்கம், பூரணம்மா, பஞ்சலிங்கம், சோதிலிங்கம், மீனாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகராசா, நாகேஸ்வரி, தயாநிதி, பாலச்சந்திரன் (ஹொலன்ட்), பத்மநிதி (கனடா), பாலகிருஷ்ணன் (லண்டன்), பாஸ்கரன் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஐங்கரன் (இத்தாலி), சிவாகரன் (சிவா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2009) திங்கட்கிழமை கரந்தன், நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன்,*
*நீர்வேலி மேற்கு.*

தகவல்:
க.சிவாகரன் (சிவா - மகன்.)

## மரண அறிவித்தல்

### அகஸ்தீன் அல்பிரட்



நெடுந்தீவு கிழக்கு, 14 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் அகஸ்தீன் அல்பிரட் நேற்று (22.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்தீன்-அந்தோனியாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற லோறன்சியாப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான றோசலின், திரேசம்மா மற்றும் அருளப்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும் றோஜா, லலிதா, டெய்சி, A.M.குணரட்ணம் (மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், யாழ்.மாவட்டச் செயலகம்), ஜெயரட்ண சௌந்தரராஜன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஆனந்தகுமார் (கனடா), அன்ரன் (லண்டன்), ஜெனிற்றா, அருள்நேசன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரன், கோவிந்தசாமி, செல்வநாயகம் (பண்டத்தரிப்பு), ஜெயின் கொண்சலீனா, மரியகொண்செப்ரா, சந்திரிகா, மரிஸ்ரெலா, மதிவாணகை ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கச்சேரி கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரைக் காப்பாற்றக் கோரித் தீக்குளித்த தி.மு.க. தொண்டர் சிவப்பிரகாசத்தின் பூதவுடல் தகனம்

சென்னை,பெப்.23

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுக்க வலியுறுத்தியும், இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தக் கோரியும் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற மனித சங்கிலியின் போது தீக்குளித்து உயிர்நீத்த சிவப்பிர காசத்தின் பூதவுடல் நேற்று மாலை தீயில் சங்கமமானது.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக் கோரி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இளை ஞர் சங்கிலிப் போராட்டம் நடந்தது.அதன் போது தி.மு.க. தொண்டர் சிவப்பிரகரசம் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு திடீ ரென்று தலையில் மண்எண்ணை ஊற்றி தீ வைத்துக் கொண்டார். உடனே அவரது உடலில் பற்றி எரிந்த தீயை அணைத்து கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். பின்னர் சிகிச்சை பலனின்றி இரவு 11 மணியளவில் அவர் இறந்தார்.

தீக்குளித்து உயிர்நீத்த சிவபிரகாசத்துக்கு வயது 55. திருவான்மியூர் மாநகர போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து விருப்ப ஓய்வு இவர், தற்போது தனியார் போக்கு வரத்து நிறுவனத்தில் சாரதி வேலை பார்த்து வந்தார். இவருக்கு மனோரமா என்ற மனைவியும், சிவகுமார் என்ற மக னும், செல்வி, தேவி, சுஜாதா, சாந்தி என்ற 4 மகள்களும் உள்ளனர்.

தீக்குளித்த சிவப்பிரகாசம் கையில் ஒரு கடிதம் வைத்திருந்தார். முதல்வர் கருணாநிதிக்கு எழுதியுள்ள அந்த கடிதத்தில் -

''தலைவர் அவர்களுக்கு, இலங்கை யில் போரை நிறுத்த வேண்டும், அங்கு தமிழர்களுடைய உயிரை காக்க வேண் டும்'' - என்று எழுதி இருந்தார் என அமைச் சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சிவப்பிரகாசத்தின் உடல் பிரேத பரிசோதனைக்குப் பின் நேற்றுக் காலை 9 மணிக்கு அவரது மகன் சிவக்குமாரிடம் ஒப்படைக்கப்பட்டது. நேற்று மாலை கானகம் மயானத்தில் சிவப்பிரகாசத்தின் பூதவுடல் தீயில் சங்கமமானது.

## விமானப் படையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த இரு விமானங்களுமே வெள்ளிக்கிழமை இரவு அழிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிரான மகத்தான வெற்றி என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் விமானப்படைப் பலம் முற்றாக சிதைவடைந்து விட்டது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் வேறு விமானங்கள் இருக்குமென்று தாம் நினைக்கவில்லையென மேலும் தெரிவித்துள்ள அவர், புதுக்குடியிருப்பிலுள்ள ஓடுபாதையிலிருந்து புறப்பட்ட விமானங்கள் மாங்குளம், மன்னார் ஊடாக கொழும்பிற்குள் நுழைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிற்குள் நுழைந்த ஒவ்வொரு விமானத்திலும் 215 கிலோகிராம் சி- 4 ரக வெடிமருந்துகள் காணப்பட்டுள்ளன. அவர்கள் விமானப் படைத் தலைமையகத்தை இலக்கு வைத்துள்ளனர் என்றும் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

விமான எதிர்ப்பு துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக விடுதலைப் புலிகளின் விமானி ஒருவரின் கை துண்டிக்கப்பட்டதாலேயே அவரால் அதனை வெடிக்கவைக்க முடியவில்லையென விமானப் படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கப்போவதாக ஐக்கிய நாடுகளுக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் சவெர்ஸ் தெரிவித்துள்ளார்

இலங்கை நிலைவரம் குறித்து பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் ஐ.நாவுக்கான தூதுவர்கள் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள அதேவேளை ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் மேரி றொபின்ஸன் கடும் அதிர்ச்சியும் வெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் மனித உரிமை ஆணையாளர் மேரி றொபின்ஸன் இலங்கை நிலைவரத்தை சூடானின் டார்பூர் மற்றும் கொங்கோவுடன் ஒப்பிட்டுள்ளார்.

இப்படி அளவுக்கதிகமாக படைப்பலம் பிரயோகிக்கப்படுவதை கேள்விக்குட்படுத்தாவிட்டால், வாழ்வின் பெறுமதியை நாங்கள் குறைத்து விடுகிறோம் என அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கை நிலைவரம் அதிர்ச்சியூட்டுவதாகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மார்ச் 30 ஆம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களைப் படுகொலை செய்ய சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது என்று கோஷமும் எழுப்பப்பட்டது.

சமூக, பல்சமய அமைப்புகள் முன் நிற்க ஈழத் தமிழர் பிரச்சினையில் கட்சி அரசியலை கடந்து பொதுமக்கள் இணைந்து வந்த முதல் பேரணி இது.

சென்னை போர் நினைவுச்சின்னத்தில் தொடங்கிய இப்பேரணி பெரியார் சிலைக்கு முன்னால் நிறைவுற்றது.

சிங்களக் புத்தாண்டுக்குள் அதிகமான தமிழர்களை படுகொலையைச் செய்ய மஹிந்த ராஜபக்ஷ அரசு திட்டமிட்டுள்ளது. அதனால்தான் 70ஆயிரம் தமிழர்கள் தான் எஞ்சியுள்ளார்கள் என்று சொல்லி வருகிறது.

மீதமானோரைக் கொன்றுவிட்டு இதோ 70ஆயிரம் பேர் அப்படியே இருக்கிறார்கள் என்று கணக்குக் காட்ட சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது.

ஆனால், அங்கிருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை இரண்டரை லட்சம் பேர்.

இந்த நூற்றாண்டின் பெரும் மனிதப் படுகொலையைத் தடுத்து நிறுத்த அனைவரும் இணைவோம் என்று கோஷங்கள்- எழுப்பப்பட்டன.

## 73 சதுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஒரு விசேட அணியும் ஈடுபட்டுள்ளதாகவும் 57 ஆவது படைப்பிரிவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தை நோக்கி முன்னேறிச் செல்வதாகவும் அடுத்து வரும் சில தினங்களில் புதுக்குடியிருப்பை படையினர் கைப்பற்றி விடுவர் என்றும் உதயநாணயக்கார மேலும்தெரிவித்தார். (அ-6)

## கொல்லப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளிக்கிழமை வன்னியில் காயப்பட்டிருந்த மக்களை கப்பல் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு திருகோணமலை வைத்தியசாலைக்கு அழைத்து வந்தனர். அச்சமயமே விடுதலைப் புலிகளால் படைச்சிப்பாயின் சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (சி)

## ஆலயங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளும் இந்து மக்களுடன் தோழமையை வெளிப்படுத்தும் முகமாக கத்தோலிக்க ஆலயங்களில் திருவிழிப்பு வழிபாடுகள் இடம்பெறும் என்று நீதி சமாதானத்துக்கான ஆணையம் தெரிவித்துள்ளது.

கத்தோலிக்க மதம் சார்ந்தவர்கள் ஆலயங்களில் திருவிழிப்பு வழிபாடுகளை அமைதியான முறையில் மேற்கொள்ளுமாறும் நீதி சமாதானத்திற்கான ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது. (அ-9)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபாடுமில்லையென அவர் சனிக்கிழமை செய்தியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் இந்தியா உறுதியாகவுள்ளது என்றும் தெரிவித்துள்ள இணையமைச்சர் இவ்விடயத்தை ஒட்டித் தமிழ் நாட்டில் காணப்படும் வன்முறையுடன் கூடிய உணர் வலைகளை துரதிஷ்டவசமானவை என்றும் வர்ணித்துள்ளார்.

இந்தியாவால் ஆலோசனைகளை வழங்க மாத்திரம் முடியும். அவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட முடியாது. அது வேறு நாடென ஆனந்தத் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசு இவ்விடயத்துக்குப் பேச்சு மூலமான தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென்பதில் உறுதியாகவும் தெளிவாகவுமுள்ளது. அதேவேளை, விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு எனவும் அவர்கள் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையெனவும் கருதுகின்றது. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## புதுக்குடியிருப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11 சடலங்களைத் தாங்கள் மீட்டனர் என்று இராணுவத்தினர் நேற்றுக் கூறினர்.

புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டையில் விடுதலைப் புலிகள் 20 பேர் உயிரிழந்தனர். 18 பேர்வரை காயமடைந்தனர். உயிரிழந்த விடுதலைப் புலிகளில் இருவரின் சடலங்களை இராணுவத்தினர் மீட்டுள்ளனர். அத்துடன் விடுதலைப் புலிகளின் வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்றும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

அதேவேளை, புதுக்குடியிருப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிர்வாக கட்டமைப்புத்தளம் ஒன்றையும், ஆயுத உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றையும் இதேவேளை 57 படையணியால் விசுவமடுவில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் கிளைமோர்க்குண்டுகளையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை 58 ஆவது டிவிசனின் படையணி கைப்பற்றியது என்றும் - அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேசமயம், அம்பலவன் பொக்கணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளில் ஐவர் உயிரிழந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் இந்தச் சண்டையில் படைத்தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து எந்த வித தகவல்களும் வெளியிடப்படவில்லை.(அ-சி)

## புறநகர்ப் பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் சிலர் கல்கிசை பயங்கரவாத தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என உறவினர்கள் கூறுகின்றனர்.

வேறு பிரதேசங்களிலிருந்து சென்ற பொலிஸாரே இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனவும் கூறப்பட்டது.

## நேற்று முல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகள் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கடும் ஷெல் தாக்குதல்களில் 48 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 55 பேர் காயமடைந்துள்ளனர்.

சிவகுமார் அஜித் (வயது - 10), அ.கமலினி (வயது - 06), புலேந்திரன் (வயது - 53) து.குலசிங்கம் (வயது - 65) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வ.குணசிங்கம் (வயது - 33), க.பார்த்தீபன் (வயது - 35), க.அற்புதம் (வயது - 04), அ.இராஜேந்திரம் (வயது - 49), அ.சுகந்தினி (வயது - 29), அ.தனுசன் (வயது - 04), அ.கமலா (வயது - 25), மு.திருஞானசம்பந்தன் (வயது - 47), த.சர்வகலாஜினி (வயது - 11), வேல்பாதம் (வயது - 55), கி.செல்லத்துரை (வயது - 55), சு.ஆறுமுகம் (வயது - 67), ம.மணிமாறன் (வயது - 28), த.இராஜ்குமார் (வயது - 26), க.மனோகரன் (வயது - 35), க.நந்தகுமார் (வயது 58), கோ.சிலுவைராசா (வயது - 28), மு.இராசேந்திரம் (வயது - 42), ஜெ.உஸா (வயது - 18), ஜெ.ஜெனிதன் (வயது 25), அ.முனியாண்டி (வயது - 40), சி.தர்மேந்திரன் (வயது - 28), செ.தினேஸ்குமார் (வயது - 18), ம.ரூபினி (வயது - 17), ப.சரஸ்வதி (வயது - 26), ஆ.சுகந்தினி (வயது - 29), ஐ.இராசேந்திரம் (வயது - 49), லோகாம்பிகை (வயது - 33), த.தர்சிகா (வயது - 21), து.குலசிங்கம் (வயது - 63), எஸ்.சிலுவைராசா (வயது - 28), க.சிவசத்தியகுமார் (வயது - 26), ம.கருநாணந்தி (வயது - 60), க.மேரி (வயது - 22), செ.சத்தியமூர்த்தி (வயது - 50), க.பகீதரன் (வயது - 18), தே.கேதீஸ்வரன் (வயது - 13), சு.இராணி (வயது - 42), கே.மேரிலூர்த்தி (வயது 64), அ.சந்திரகலா (வயது - 16), மே.மணிமாலா (வயது - 43), ம.பரஞ்சோதி (வயது - 48), க. சரஸ்வதி (வயது - 42), தே.தவீதராசா (வயது - 34), கா.பரமசிவமூர்த்தி (வயது - 55), நா.சசிக்குமார் (வயது - 15), நா.ஜெனிராஜ் (வயது - 22), சி.நல்லையா (வயது - 52), பா.லோகன் (வயது - 30), செ.கனகாம்பிகை (வயது - 50), சு.குவேந்திரவதனி (வயது - 35), பெ.கதிர்வேலு (வயது - 72), செ.சரோஜா (வயது - 35), அ.பிரியங்கா (வயது - 17) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.(அ-சி)

PC UPGRADES
upgrade your current computer to a brand new computer
Free checkup
Checking and upgrading at your door step
HOT LINE 021 222 5893
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம் 175/3, Kasthuriyar Road, Jaffna. 0773963280
நெல்லியடி Kodikamam Road, Nelliyadi. 0773039536

PHYSICS A/L 2009 DAY
தொடர் மாதிரிப் பரீட்சை
PHYSICS K.Selvan
★ பரீட்சைகள் அனைத்தும் மாதிரிப் பரீட்சைகளாகவே நடைபெறும்.
★ புள்ளிவழங்கல் திட்டம் வழங்கப்படும் அதேவேளை வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறும்.
★ பரீட்சை நேர அட்டவணை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
★ முதன்மை இடங்களை பெறும் மாணவர்களுக்கு பணத்தொகை பரிசாக வழங்கப்படும்.
★ கட்டணம் 450/=
Clock Tower Road, Jaffna
விண்ணப்ப முடிவு திகதி - 28.02.2009

நிலா வெளியீடு
தரம் - 05 புலமை பரிசில் பரீட்சை - 2009
* பிரதி ஞாயிறு தோறும் இவ் வினாத்தாள் வெளிவரும்.
* வினாத்தாள்கள் விடைகளுடன் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
N.C.A. கல்வி நிலையம் - இணுவில்.
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்.
ரஞ்சன் களஞ்சியம் - மல்லாகம்.

பதவி வெற்றிடம்
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. Instructor (MSO, DTP) full time
2. Instructor (Web designing) part time
3. Instructor (Mobile phone Rep) part time
28.02.09 ற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

பதிப்பு 2 வெளிவந்துவிட்டது
பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
S.Branavan
G.C.E O/L., A/L.
General Information and Communication Technology
பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
English & Tamil medium
Course Fees (Monthly 300/=)
ஆசிரியர் :-திரு.சி.பிரணவன்
Start on: 28.02.2009
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org